தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 18.11.2013

### கோமாரி நோயினால் தொடரும் கால்நடைகள் இறப்பு: சோகத்தில் விவசாயிகள்

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் கோமாரி நோயினால் பாதிக்கப்பட்டு மாடுகள் இறக்கும் சம்பவம் தொடருவதால் விவசாயிகள் மிகுந்த சோகத்தில் உள்ளனர்.

கடந்த ஆண்டு கடும் வறட்சியால் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் 8 மாதங்களாக வறண்டதால் புல், பூண்டுகள் அழிந்து காட்சியளித்தது.

இதனால் கால்நடைகளுக்குத் தேவையான பசும் சத்துள்ள இயற்கை உணவு கிடைக்கவில்லை. மேலும், தற்போது வானிலை மாற்றத்தாலும், கடும் வெப்பத்தாலும் கால்நடைகள் குறிப்பாக மாடுகள், கன்றுகள் கோமாரி நோயினால் பாதிக்கப்பட்டு சுருண்டு விழுந்து இறந்து வருகின்றன.

குறிப்பாக, சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் குமராட்சி, ஸ்ரீமுஷ்ணம், காட்டுமன்னார்கோவில், பரங்கிப்பேட்டை, புவனகிரி ஆகிய பகுதிகளில் பல கிராமங்களில் தினமும் 4 அல்லது 5 மாடுகள் வீதம் இறக்கின்றன. கால்நடைத் துறையினர் தடுப்பு ஊசிப்போட்டும் அந்த நோய் கட்டுப்படவில்லை என்று கூறுகின்றனர். கோமாரி நோயிற்கான போதிய மருந்து இல்லை எனக் கூறப்படுகிறது.

சிதம்பரம் அருகே துணிஞ்சிரமேடு கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை சுந்தரமூர்த்தி என்பவருடைய பசு மாடும். காட்டுமன்னார்கோவில் கண்டமங்கலத்தில் விவசாயி ஒருவரின் பசுமாடும் இறந்துள்ளன.

சில கிராமங்களில் கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளை வேதனையில் பிரதே பரிசோதனை செய்யாமலேயே விவசாயிகள் புதைத்தும், நீரில் தூக்கிப் போட்டும் உள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் கிடைக்க வாய்ப்பில்லை எனக் கூறப்படுகிறது.

எனவே, தமிழக அரசு அழிந்து வரும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளை காக்கவும், நோயினைத் தடுத்து கட்டுப்படுத்தவும், இறந்த மாடுகளுக்கு தமிழக அரசு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூ கட்சியைச் சேர்ந்த சிதம்பரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

**வீட்டுக் காய்கனித் தோட்டம் அமைப்பு சிறப்பு பயிற்சி**

குமரி மாவட்டம், திருநந்திக்கரையில் வீடுகளில் காய்கனித் தோட்டம் அமைக்கும் பயிற்சி முகாம் நடைபெற்றது.

திற்பரப்பு பேரூராட்சி 6-ஆவது வார்டு திருநந்திக்கரையில் கடந்த ஒருவருடமாக தமிழ்நாடு அறிவியல் இயக்க ஒருங்கிணைப்பில் கிராம வளர்ச்சிக்கான மக்கள் இயக்கம் சார்பில், பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் தோட்டக் கலை ஆராய்ச்சி நிலைய உதவியுடன் வீடுதோறும் காய்கனித் தோட்டம் அமைக்க பயிற்சிகள், குடும்பக் கூட்டங்கள், கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

அதன் தொடர் நடவடிக்கையாக வீட்டுக் காய்கனித் தோட்டம் அமைத்தல் சிறப்புப் பயிற்சி தேர்வு செய்யப்பட்ட 30 நபர்களுக்கு அளிக்கப்பட்டது. இதில் வெண்டை, கீரை, பப்பாளி, பயறு, அசோலா, தக்காளி ஆகியவை பயிரிடுதல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியை திருநந்திக்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கித் தலைவர் எஸ். சுரேஷ்குமார் தலைமை வகித்துத் தொடங்கி வைத்தார். பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் ஜேன்சுஜாதா, தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் ஆர். கண்ணன், உதவிப் பேராசிரியர் மணிவண்ணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

## அரியலூர் மாவட்டத்தில் கோமாரி நோயை தடுக்க தீவிர நடவடிக்கை: ஆட்சியர் தகவல்

அரியலூர் மாவட்டத்தில் கோமாரி நோயைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தெரிவித்தார்.

அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்த் தடுப்புத் தொடர்பானக் கூட்டம் சனிக்கிழமை மாலை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் பேசும்போது: அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகள், மற்றும் நகராட்சிகளில் உள்ள பாதைகளில் சுண்ணாம்பு பவுடர் தெளித்தும், கழிவுநீர் தங்காத வகையில் அனைத்து கழிவு நீர் பாதைகளையும் சுத்தப்படுத்தி கால்நடைகள் உள்ள பகுதிகளில் சுகாதாரமாக இருக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள முக்கியமான கிராமங்களில் கோமாரி நோய் சம்பந்தமான விழிப்புணர்வு முகாம் நடத்தி கால்நடை வளர்ப்பவர்களிடம் துண்டறிக்கைகளை வழங்கி நோயின் தன்மையை தெரிவிக்குமாறு கோட்டாட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் கால்நடைத் துறை அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று மாடுகள், ஆடுகளை நன்கு பரிசோதனை செய்து கோமாரி நோய் தாக்கியிருந்தால் அதற்கு சிகிச்சை அளித்து அந்த தகவலை ஆட்சியருக்கு தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கருப்பசாமி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சடையப்ப விநாயகமூர்த்தி, கோட்டாட்சியர் கணபதி, கால்நடைத்துறை உதவி இயக்குநர் சந்திரா, பத்மநாபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.194 கோடி கடன்: ஆட்சியர் தகவல்

அரியலூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.194 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

அரியலூரில் 60 வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு தலைமை வகித்து கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கும்,சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கியும்,169 பேர்களுக்கு மத்தியக் கால கடனாக ரூ.69.42 லட்சமும், 113 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.91 கோடியும் கடனாக வழங்கி ஆட்சியர் பேசும் போது: பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உறுதியான மற்றும் ஆற்றல் வாய்ந்த கருவியாக கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பொருளாதார முன்னேற்றத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு முக்கியத் துறைகளில் இடம் பெற்றுள்ளது. வேளாண்கடன், நகைக் கடன், வேளாண் பொருட்களுக்கு ஆதரவு விலை, மற்றும் பொது விநியோகத்திட்டம் என பல முக்கியப் பணிகளை கூட்டுறவு அமைப்புகள் செயல்படுத்துகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் 64 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் 2013-14 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் வரை ரூ.54.31 கோடி பயிர்க் கடனாகவும், ரூ.2.38 கோடி மத்தியக் காலக் கடனாகவும் ரூ.131.04 கோடி நகைக் கடனாகவும், ரூ.3.99 கோடி சுய உதவிக்குழுக்களுக்கான கடனாகவும், ரூ.0.08 கோடி மாற்றுத்திறனாளிகளுக்கான கடனாகவும், ரூ.0.44 கோடி சிறுவணிகக் கடனாகவும், ரூ.1.68 கோடி தானிய ஈட்டுக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.2.29 கோடி பிற்பட்ட இன மக்களுக்கு குறைந்த வட்டியில் பொருளாதாரக் கடனாக வழங்க விண்ணப்பங்கள் அனுமதிக்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார கடன் கழகத்திற்கு (TABCEDCO) அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் பொதுச்சேவை மையங்கள் தொடங்கப்பட்டு, மக்களுக்கு கணினி சிட்டா, அ. பதிவேடு நகல் வழங்குதல், போன்ற சேவைகளும், மின் ஆளுமை(E Governance) திட்டத்தின் கீழ் ஜாதிச் சான்று, இருப்பிடச் சான்று, முதல் பட்டதாரிச் சான்று, விதவைச் சான்று முதலிய சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரியலூர் நகரக் கூட்டுறவு வங்கியிலும், அதன் ஜயங்கொண்டம் கிளையிலும் கண்காணிப்பு காமிரா பொருத்தப்பட்டு வருகிறது. மேலும் ஆனந்தவாடி

அசாவீரன்குடிகாடு ஆகிய சங்கங்களில் கண்காணிப்பு காமிரா பொருத்த அனுமதி கோரப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர். விழாவுக்கு அரியலூர் சட்டப்பேரவை உறுப்பினர் துரை.மணிவேல் முன்னிலை வகித்தார். கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் முருகன் வரவேற்றார். பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் ஜமால்முகமது கூட்டுறவு உறுதிமொழி வாசித்தார்.துணைப் பதிவாளர் அருளரசு நன்றி கூறினார். விழாவில் திருச்சி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் மிருணாளினி,மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் அன்பழகன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் சீனிவாசன்(திருமானூர்),சுதா(தா.பழூர்), மாவட்ட வழங்கல் அலுவலர் மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோயால் இறந்த கால்நடைகளை நீர்நிலைகளில் போட்டால் நடவடிக்கை- ஆட்சியர் எச்சரிக்கை**

கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்த கால்நடைகளை நீர்நிலைகளில் போட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கரூர் மாவட்ட ஆட்சியர் ச.ஜெயந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கரூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்நடை சந்தைகளுக்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. கோமாரி நோய் பாதிக்கப்பட்டு இறந்த கால்நடைகளை ஆழமாக புதைக்கவோ, எரிக்கவோ வேண்டும். எந்த காரணம் கொண்டும் இறந்த கால்நடைகளை பொது நீர்நிலைகளிலோ, கால்வாய், ஏரி, குளம், குட்டைகளிலோ போடக்கூடாது. அவ்வாறு செய்பவர்கள் மீது ஊராட்சி நிர்வாகமும், மாவட்ட நிர்வாகமும் கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தென்பட்டால் உடனே அந்த பகுதியில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி தங்களது கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மேலும் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாய் மற்றும் கால் குளம்புகளை பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசல் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். கால்நடைகள் பட்டினியால் இறப்பதை தவிர்க்க அதற்கு ராகிக்கூழ், தேன் ஆகியவற்றை வாய் வழியாக கொடுக்கலாம். கோமாரி நோய் தடுப்பது குறித்து ஒவ்வாெொரு வட்டாரத்திலும் உள்ள கால்நடை உதவி மருத்துவர், ஊராட்சி

தலைவர், கிராமநிர்வாக அலுவலர், பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வட்ட அளவில் உதவி இயக்குநர், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டு 15 நாட்களுக்கு ஒரு முறை கூட்டம் நடத்தி மேற்பார்வையிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மண்டல இணை இயக்குநர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு வாரந்தோறும் கண்காணித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி நவ. 20-ல் விவசாயிகள் போராட்டம்**

நாகுடி கடைமடைப் பகுதியில் கருகும் பயிர்களை காப்பாற்ற கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் நடத்துவதென நாகுடியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பொதுப்பணித் துறையின் கல்லணைக் கால்வாய் நாகுடி பிரிவில் இருந்து திருவப்பாடி வாய்க்கால், மகாகணபதிபுரம் வாய்க்கால், சிறுமருதூர் வாய்க்கால், கல்லக்கமங்கலம் வாய்க்கால் மற்றும் புதிய தாய்வாய்க்கால் மூலம் சுமார் 110 ஏரிகள் பாசன வசதி பெறுகின்றனர்.

இந்நிலையில் மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் கடைமடைப் பகுதிகளுக்கு முறையாக தண்ணீர் வந்து சேரவில்லைஇதனால் கடந்த மாதம் பெய்த மழையை பயன்படுத்தி . நேரடி நெல் விதைப்பு செய்த பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நாகுடி கடைமடை பகுதிக்கு முறைவைக்காமல் தண்ணீர் வழங்ககோரி வரும் நவ .20-ல் நாகுடி பொதுப்பணித் துறை கல்லணைக் கால்வாய் பிரிவு அலுவலகம் முன்பு சாலை மறியல் போராட்டம் நடத்துவது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் மாமுத்துராமலிங்கன் . தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**பருத்தியில் சிவப்பு இலை உருவாதல், சப்பைகள் கொட்டுதலை கட்டுப்படுத்த ஆலோசனை**

பருத்தியில் நுண்ணூட்ட சத்து குறைபாட்டினால் ஏற்படும் இலை உருவாதல் மற்றும் சப்பைகள் கொட்டுவதை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளார் வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி பயிரானது சுமார் 3,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்திற்கு முன் பெய்த மழை, தட்ப வெப்ப சூழ்நிலை காரணம் மற்றும் மண்ணில் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டினால் பருத்தியில் இலைகள் சிவப்பாக மாறுவதோடு, பருத்தி செடியில் உள்ள சப்பைகளும் கொட்டுகின்றன. இதனால், பல்வேறு பகுதிகளில் பருத்தி இலைகளின் ஓரங்கள் சிவப்பாக மாறி, நாளுக்கு நாள் செடிகள் முழுவதும் பரவி இலைகள் கொட்டி விடுகின்றன. இதற்கு முக்கிய காரணம், நுண்ணூட்ட சத்தான மெக்னீசியம் குறைபாடாகும். அதேபோல, போரான் என்ற நுண்ணூட்ட சத்து குறைபாடினால் சப்பைகள் காய்ந்து கொட்டுகின்றன.

இதைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் பருத்தி ப்ளஸ்-1 10 லிட்டர் தண்ணீருக்கு 125 கிராம் என்ற அளவில், 10 மில்லி ஒட்டும் திரவத்துடன் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளித்து கட்டுப்படுத்தலாம். பருத்தி ப்ளஸ் 2.5 கிலோவை இரண்டாக பிரித்து, 2 முறை பயன்படுத்த வேண்டும். இந்த பருத்தி ப்ளஸ்- 1, வயலில் ஈரப்பதம் உள்ள நேரத்தில் தெளிக்க வேண்டும்.  பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் ஆராய்ச்சி மையங்களில் மட்டுமே பருத்தி ப்ளஸ்- 1 வகை கிடைக்கும். கிடைக்காத பட்சத்தில், மெக்னீசியம் சல்பேட் 100 கிராம், ஜங்க் சல்பேட் 50 கிராம், யூரியா 10 கிராம், போராக்ஸ் 20 கிராம் ஆகியவற்றை, 10 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் 10 மில்லி ஒட்டும் திரவத்துடன் கலந்து 15 நாள்கள்

இடைவெளியில் 2 முறை தெளித்து நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறையினால் ஏற்படும் சிவப்பு இலை தோன்றுதல் மற்றும் சப்பை கொட்டுவதை தடுக்க முடியும்.

மேலும் விவரங்களுக்கு, வேளாண் அறிவியல் மையத்தை நேரில் அல்லது 9787620754, 9944244582 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

**நெற்பயிரில் இலை சுருட்டுப் புழு மேலாண்மை**

நெற்பயிரில் இலை சுருட்டுப் புழு மேலாண்மை குறித்து நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் விவசாயிகளுக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளது . இதுதொடர்பாக நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் அண்மையில் வெளியிட்ட செய்திக் குறிப்பு : திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் இலை சுருட்டுப் புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறதுஇதன் . தாய் பூச்சி சிறியதாகவும் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் இறக்கைகள் சாய்வான கோடுகளுடனும் காணப்படும்இப்பூச்சியின் புழுக்கள் இலைகளை நீள்வாக்கில் . மடித்து உள்ளிருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டி உண்ணுவதால் இலைகள் வெண்மையாக மாறி செடிகள் வளர்ச்சி குன்றி விடும்.

இப்பூச்சிகளின் தாக்குதலிருந்து நெற்பயிரை பாதுகாக்க ஒரு ஏக்கருக்கு குளோர் பைரிபாஸ் 500 மிலி அல்லது பாஸ்போ மிடான் 400 மிலி அல்லது புரபினோபாஸ் 400 மிலி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலைகள் முழுவதும் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.

**தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பரவலாக மழை**

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பரவலாக சனிக்கிழமை மழை பெய்ததை அடுத்து, விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் விவசாயம் சார்ந்த பகுதி. இங்கு நிலக் கடலை, நெல், ராகி, கம்பு, கரும்பு, மரவள்ளிக் கிழங்கு, மஞ்சள் போன்ற பயிர்கள் மானாவாரியாகவும், இறவையாகவும் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த நிலையில், இரு மாவட்டங்களிலும் சனிக்கிழமை பரவலாக மழை பெய்தது.

அதிகபட்சமாக தருமபுரி மாவட்டத்தில் அரூரில் 104.50 மிமீ., கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் 94.20 மிமீ. மழையும் பதிவானது. தருமபுரி மாவட்டத்தில் சராசரியாக 67.31 மிமீ.யும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 50.76 மிமீ.யும் பதிவானது. இந்த மழையால், தருமபுரி அதியமான் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மழைநீர் குளம் போலத் தேங்கிநின்றது.

இந்த மழை மானாவாரியாகச் சாகுபடி செய்துள்ள நிலக் கடலை, ராகி, மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கு உகந்தது. இதனால், மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதேபோல, இறவைப் பயிரான கரும்பு, நெல், மரவள்ளிக் கிழங்கு போன்ற பயிர்களை நடவு செய்யும் தருவாயில் மழை பெய்ததால், விவசாயிகள் நடவு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தொடர்ந்து, பல மணி நேரம் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை பதிவான மழை அளவு:(மில்லி மீட்டரில்)

தருமபுரி மாவட்டம், தருமபுரி 81, அரூர் 104.50, பாப்பிரெட்டிப்பட்டி 61, பாலக்கோடு 66.4, பென்னாகரம் 56, ஒகேனக்கல் 41, மாரண்டஹள்ளி 60, ஆட்சியர் அலுவலகம் 90. மொத்த மழை அளவு 469. சராசரி 67.13.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் 79.80, தேன்கனிக்கோட்டை 25, ஓசூர் 14, கிருஷ்ணகிரி 48, அஞ்செட்டி 30, ஊத்தங்கரை 94.20, தளி 20, பெனுகுண்டாபுரம் 85.40, சூளகிரி 15, நெடுங்கல் 72.40, ராயக்கோட்டை 34, போச்சம்பள்ளி 91.30. மொத்தம் 609.10. சராசரி 50.76 மழை பதிவாகியுள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த இரு தினங்களாக காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால், சனிக்கிழமை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 5,580 கன

அடியாக இருந்த நீர்வரத்து, ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 7,428 கன அடியாக அதிகரித்தது.

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய்ப் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டதாலும்,

நீர்வரத்து அதிகரித்ததாலும் சனிக்கிழமை காலை 79.41 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், ஞாயிற்றுக்கிழமை காலை 80.02 அடியாக உயர்ந்தது.

**கோமாரி நோய்: கால்நடை வளர்ப்போருக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுரை**

சேலம் மாவட்டத்தில் கோமாரி நோய் அறிகுறி தென்படும் கால்நடைகளை உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவுரை வழங்கியுள்ளது.

இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தேசிய அளவிலான கோமாரி நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 2011 ஜூலை மாதம் முதல் நான்கு சுற்றுகளில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இந்த நிலையில், கடந்த செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் 21-ம் தேதி வரை 5-ஆவது சுற்று தடுப்பூசி போடப்பட்டது. இது வரையிலும் சேலம் மாவட்டத்தில் சுமார் 5.81 லட்சம் கால்நடைகளுக்கு, அதாவது 95.5 சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இந்த நிலையில், சேலம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோமாரி நோய் பரவி வருவதாகக் கூறப்படுகிறது. தடுப்பூசி போடப்பட்ட ஒரு சில கால்நடைகளும் இந்த நோயால் பாதிக்கப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, நோய் பரவலைத் தடுப்பதற்காக மாவட்டம் முழுவதும் கால்நடை சந்தைகள் தாற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ப்போர் அவை தங்கும் இடங்களைச் சலவை சோடா, பிளீச்சிங் பவுடர் போன்றவற்றைக் கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

மேலும், நோய் பாதித்த கால்நடைகளின் கால்களை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலால் அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். கால்நடைகள் பட்டினியால் உயிரிழப்பதைத் தடுப்பதற்காக வாய் வழியாக ராகி கூழ், தேன் ஆகியவற்றை தொடர்ந்து வழங்க வேண்டும்.

நோய் பாதிப்பு தென்படும் கால்நடைகளை உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு கொண்டு சென்று இலவசமாகச் சிகிச்சை பெற்று குணப்படுத்தலாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவுரை வழங்கியுள்ளது.

**கோமாரி நோய்: கால்நடை வளர்ப்போருக்கு மாவட்ட நிர்வாகம் அறிவுரை**

சேலம் மாவட்டத்தில் கோமாரி நோய் அறிகுறி தென்படும் கால்நடைகளை உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவுரை வழங்கியுள்ளது.

இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சேலம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தேசிய அளவிலான கோமாரி நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 2011 ஜூலை மாதம் முதல் நான்கு சுற்றுகளில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இந்த நிலையில், கடந்த செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் 21-ம் தேதி வரை 5-ஆவது சுற்று தடுப்பூசி போடப்பட்டது. இது வரையிலும் சேலம் மாவட்டத்தில் சுமார் 5.81 லட்சம் கால்நடைகளுக்கு, அதாவது 95.5 சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

இந்த நிலையில், சேலம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோமாரி நோய் பரவி வருவதாகக் கூறப்படுகிறது. தடுப்பூசி போடப்பட்ட ஒரு சில கால்நடைகளும் இந்த நோயால் பாதிக்கப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, நோய் பரவலைத் தடுப்பதற்காக மாவட்டம் முழுவதும் கால்நடை சந்தைகள் தாற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

கால்நடை வளர்ப்போர் அவை தங்கும் இடங்களைச் சலவை சோடா, பிளீச்சிங் பவுடர் போன்றவற்றைக் கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

மேலும், நோய் பாதித்த கால்நடைகளின் கால்களை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலால் அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். கால்நடைகள் பட்டினியால் உயிரிழப்பதைத் தடுப்பதற்காக வாய் வழியாக ராகி கூழ், தேன் ஆகியவற்றை தொடர்ந்து வழங்க வேண்டும்.

நோய் பாதிப்பு தென்படும் கால்நடைகளை உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு கொண்டு சென்று இலவசமாகச் சிகிச்சை பெற்று குணப்படுத்தலாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவுரை வழங்கியுள்ளது.

**குளத்துப்பாளையத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்**

கிட்டாம்பாளையம் ஊராட்சி குளத்துப்பாளையம் கிராமத்தில் சனிக்கிழமை கால்நடை பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது.

கால்நடைத் துறை சார்பில் நடைபெற்ற இந்த முகாமில், சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடற்புழு நீக்கம், கோழிகளுக்கு தடுப்பூசி, செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்கம், ஆண்மை நீக்கம், கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் பொது சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. இந்த முகாமில் 1317 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கால்நடை மருத்துவர்கள் சரவணன், ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நாளைமுதல் அன்னூரில் பருத்தி ஏல விற்பனை துவக்கம்**

அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வரும் செவ்வாய்க்கிழமை (நவ.19) முதல் வாரம்தோறும் இதே நாளில் காலை 11.30 மணியளவில் குளிர்காலப் பருத்தி ஏல விற்பனை நடைபெற உள்ளது.

உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் அதிகளவில் ஏலத்தில் கலந்து கொள்ள உள்ளதால் போட்டி ஏலம் மூலமாக உயர்ந்தபட்ச விலை விவசாயிகளுக்கு

கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சரியான எடை, முழுமையான பணம், கமிஷன் தரகு கிடையாது, இருப்பு வைக்க கிடங்கு வசதி, நவீன தொழில்

நுட்ப தகவல் வசதி,

வெளியூர் விலை விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இங்கு உள்ளன.

அதனால், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் வே.ரமேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

**தில்லியில் 20-இல் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்: இந்திய மக்கள் இயக்கத்தினர் ஈரோட்டில் இருந்து பயணம்**

எத்தனாலை வாகன எரிபொருளாக பயன்படுத்தக் கோரி புதுதில்லியில் நவ.20-ஆம் தேதி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க இந்திய மக்கள் இயக்கம் தலைமையில் ஈரோட்டில் இருந்து புதுதில்லிக்கு விவசாயிகள் ஞாயிற்றுக்கிழமை ரயிலில் புறப்பட்டனர்.

இது குறித்து இந்திய மக்கள் இயக்கத்தின் கள அமைப்பாளர் செ.நல்லசாமி, ஈரோட்டில் செய்தியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டி:

உலகளவில் வாகன எரிபொருளாக பெட்ரோலியப் பொருள்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்த எண்ணெய் வளம், 30 ஆண்டுகளில் வற்றிப் போகும் என வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். பெட்ரோலிய நுகர்வு உலகெங்கிலும் கூடிக் கொண்டே செல்வதால் ஆங்காங்கே தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

அமெரிக்கா, பிரேசில் போன்ற நாடுகள் மாற்று எரிபொருளான எத்தனாலுக்கு மாறிவிட்டன. 85 சதவீதம் அளவுக்கு எத்தனாலை பெட்ரோலில் கலந்து வாகனங்களை இயக்கி வருகின்றனர். எத்தனால் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி. என்றுமே வற்றிப் போகாத ஒன்று.

40 ஆண்டுகளுக்கு முன்பு பெட்ரோலிய இறக்குமதி காரணமாக, பிரேசில் நாட்டுக்கு பெரும் நெருக்கடி வந்தபோது அதை சமாளிக்க எத்தனாலின் பயன்பாட்டை அந்நாடு அதிகரித்தது.

போர்க்கால அடிப்படையில், பல சர்க்கரை ஆலைகளை எத்தனால் ஆலைகளாக மாற்றி, வாகன எரிபொருளாக எத்தனாலைப் பயன்படுத்தத் தொடங்கினர். படிப்படியாக முன்னேறி, இன்று ஒலிம்பிக் போட்டியை நடத்தும் அளவுக்கு வளர்ந்துவிட்டனர்.

கள்ளில் இருந்தும், இதர வேளாண் விளைபொருள்களில் இருந்தும் எத்தனால் தயாரிக்கலாம். இக்கோரிக்கையை வலியுறுத்தி கோவையில் இருந்து சென்னை வரையிலான முதல்கட்டப் பிரசாரப் பயணத்தை, இந்திய மக்கள் இயக்கம் நடத்தி முடித்துள்ளது.

சென்னை முதல் தில்லி வரையிலான 2-ஆம் கட்டப் பயணம், ஈரோட்டில் இருந்து ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இக்குழு சென்னையில் இருந்து திங்கள்கிழமை புதுதில்லி புறப்படும்.

நவ.20-ஆம் தேதி தில்லியில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். அதைத் தொடர்ந்து நவ.21, 22-ஆம் தேதிகளில் கோரிக்கை மனுவை குடியரசுத் தலைவர், பிரதமர், அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள், பிரதமர் வேட்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் அளிப்போம்.

பயண முடிவில் தில்லி பிரகடனம் என்ற பெயரில் சில முக்கிய முடிவுகள் வெளியிடப்படும். இந்த முடிவு வரும் 2014 தேர்தலில் களம் இறங்கும் அரசியல் கட்சிகளுக்கும், பிரதமர் வேட்பாளர்களுக்கும், இதர வேட்பாளர்களுக்கும் பெரிய அளவிலான நெருக்கடியை ஏற்படுத்தும் என்றார்.

## நீலகிரியில் தொடர்ந்து பரவலாக மழை: கடும் குளிர், மேகமூட்டத்தால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

நீலகிரி மாவட்டத்தில் 2வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்து பரவலாக பலத்த மழை பெய்தது.

தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான குளிர் நிலவுவதோடு, மேகமூட்டமும் காணப்படுவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

உறைபனிக் காலம் தொடங்கியுள்ள நீலகிரி மாவட்டத்தில் குறிப்பாக உதகை மற்றும் சுற்றுப் பகுதிகளில் கடந்த இரண்டு நாள்களாக தொடர்ந்து பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. குன்னூர் மற்றும் கோத்தகிரி பகுதிகளில் எதிர்பாராமல் கிடைத்துள்ள இந்த மழையால் குடிநீர் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு ஏற்பட்டுள்ளது எனலாம். அதேபோல, இம்மழை விவசாயப் பயிர்களுக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது.

உதகை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கடுமையான குளிர் நிலவுகிறது. பெரும்பாலான இடங்களில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, கடுமையான மேகமூட்டமும் காணப்படுவதால் பகல் நேரத்திலும் முகப்பு விளக்கைப் போட்டுக்கொண்டே வாகனங்கள் இயக்கப்படுகின்றன.

இதனால், உதகையில் குவிந்துள்ள வெளி மாநில சுற்றுலாப் பயணிகள் வேறு எந்த பகுதிக்கும் செல்ல முடியாமல் ஏமாற்றமடைந்தனர்.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 350 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதிகளவாக கொடநாட்டில் 45 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை விவரம் (அளவு மி.மீ.யில்): குன்னூர்-44, கோத்தகிரி-42, உதகை-37, கிளன்மார்கன்-32, கேத்தி-31, குந்தா-18, அவலாஞ்சி-15, பர்லியார்-14, கிண்ணக்கொரை-12, கெத்தை மற்றும் அப்பர்பவானி தலா 11, கல்லட்டி-10, எமரால்டு-9, கூடலூர்-8, நடுவட்டம்-7.5, தேவாலா-4 மி.மீ.

**கால்நடைகளுக்கு  காணைநோய் தடுப்பூசி: ஒத்துழைப்பு வழங்க ஆட்சியர் வலியுறுத்தல்**

கால்நடைகளுக்கு காணைநோய் தடுப்பூசி போட வரும் சமயத்தில் கிராம மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் கேட்டுக் கொண்டார்.

காரைக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை கால்நடைகளுக்கு காணைநோய் தடுப்பு நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது:

பொது மக்கள் தாங்கள் வளர்த்து வரும் கால்நடைகளுக்கு காணைநோய் தடுப்பூசி போட வேண்டும். ஊசி போடாமல் விடுபட்ட கால்நடைகளுக்கு ஊசி போட கால்நடை மருத்துவக் குழு கிராமத்திற்கு வரும் சமயம் தகுந்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும் ஏதேனும் கால்நடைகளுக்கு காணைநோய் இருப்பது தெரிந்தால் அதுபற்றிய விவரங்களை 04575 240415, 94450 01128 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்கள் தெரிவிக்கலாம்.

காணைநோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லக் கூடாது. நோய் பாதித்த கால்நடைகளை தனியாக பராமரிக்க வேண்டும். அவற்றை மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது.

தொழுவத்தை சுத்தமாக பராமரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட கால்நடைகளை சோப்பு கலந்த தண்ணீர் கொண்டு சுத்தப்படுத்த வேண்டும் என்றார் ஆட்சியர்.

**மதுராந்தகத்தில் 112 மி.மீ. மழை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி மதுராந்தகத்தில் அதிகபட்சமாக 112 மி.மீட்டர் மழை பதிவானது.

நாகப்பட்டினம் அருகே சனிக்கிழமை மாலை புயல் கரையைக் கடந்தது. இதைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. மேலும் மாவட்டம் முழுவதும் சனிக்கிழமை மாலை முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை விட்டு விட்டு கனமழை பெய்தது. ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு பிறகுதான் சூரியன் லேசாக தலையைக் காட்டியது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி மதுராந்தகத்தில் அதிகபட்சமாக 112 மி.மீ. மழை பதிவானது. மற்றப் பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டர்): காஞ்சிபுரம், உத்தரமேரூர் 65, மாமல்லபுரம் 59, செங்கல்பட்டு 58, ஸ்ரீபெரும்புதூர் 47, திருக்கழுகுன்றம் 36, செய்யூர் 35, கேளம்பாக்கம் 32, தாம்பரம் 27.

**நீலகிரியில் தொடர்ந்து பரவலாக மழை: கடும் குளிர், மேகமூட்டத்தால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு**

நீலகிரி மாவட்டத்தில் 2வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்து பரவலாக பலத்த மழை பெய்தது.

தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான குளிர் நிலவுவதோடு, மேகமூட்டமும் காணப்படுவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

உறைபனிக் காலம் தொடங்கியுள்ள நீலகிரி மாவட்டத்தில் குறிப்பாக உதகை மற்றும் சுற்றுப் பகுதிகளில் கடந்த இரண்டு நாள்களாக தொடர்ந்து பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. குன்னூர் மற்றும் கோத்தகிரி பகுதிகளில் எதிர்பாராமல் கிடைத்துள்ள இந்த மழையால் குடிநீர் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு ஏற்பட்டுள்ளது எனலாம். அதேபோல, இம்மழை விவசாயப் பயிர்களுக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது.

உதகை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கடுமையான குளிர் நிலவுகிறது. பெரும்பாலான இடங்களில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, கடுமையான மேகமூட்டமும் காணப்படுவதால் பகல் நேரத்திலும் முகப்பு விளக்கைப் போட்டுக்கொண்டே வாகனங்கள் இயக்கப்படுகின்றன.

இதனால், உதகையில் குவிந்துள்ள வெளி மாநில சுற்றுலாப் பயணிகள் வேறு எந்த பகுதிக்கும் செல்ல முடியாமல் ஏமாற்றமடைந்தனர்.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 350 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதிகளவாக கொடநாட்டில் 45 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை விவரம் (அளவு மி.மீ.யில்): குன்னூர்-44, கோத்தகிரி-42, உதகை-37, கிளன்மார்கன்-32, கேத்தி-31, குந்தா-18, அவலாஞ்சி-15, பர்லியார்-14, கிண்ணக்கொரை-12, கெத்தை மற்றும் அப்பர்பவானி தலா 11, கல்லட்டி-10, எமரால்டு-9, கூடலூர்-8, நடுவட்டம்-7.5, தேவாலா-4 மி.மீ.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.11.2013**

## "டெல்டா' மாவட்டங்களில் பலத்த மழைமயிலாடுதுறையில் அதிகம் :

தஞ்சாவூர்: தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய டெல்டா மாவட்டங்களில் நேற்று முன்தினம் முழுவதும் மழை வெளுத்துக்கொட்டிய நிலையில், நேற்று காலை, 8 மணி வரை பதிவான மழையளவு விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சையில் நேற்று முன்தினம் காலை முதல், இரவு வரை, ஒருநாள் முழுவதும் கன மழை பெய்ததுஇதனால் ., பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூட முடியாமல் தவித்தனர்இதனா .ல் சதய விழாவுக்கு மாற்றாக, தஞ்சை மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி நிறுவனங்களுக்கு பணி நாளாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பள்ளிகளுக்கு விடுமுறை அறிவித்து, தஞ்சை கலெக்டர் சுப்பையன் அறிவித்தார். இதனால், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், அலுவலர்கள், பணியாளர்கள், மழை அவதியில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பினர்இதைத்தொடர்ந்து புயல் . கரையை கடந்தது எனும் அறிவிப்பையடுத்து, தஞ்சையில் நேற்று காலை, 9 மணிக்கு வெய்யில் உக்கிரம் காட்ட துவங்கியது. பகல் முழுவதும் மழை பெய்யவில்லைஇதனால் தஞ்சை நகர மக்கள் வழக்கமான . உற்சாகத்துக்கு மாறினர்.

தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய டெல்டா மாவட்டங்களில், நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, பதிவான மழையளவு விபரம் .மீ.மி),) வருமாறு:

தஞ்சை மாவட்டம் கல்லணை :67.0 மி.மீ., திருக்காட்டுப்பள்ளி 53.4, திருவையாறு 25.6, தஞ்சை 43.4, அய்யம்பேட்டை 42.0, பாபநாசம் 52.0, கும்பகோணம் 31.0, அணைக்கரை 18.0, நெய்வாசல் தென்பாதி 20.6, பூதலூர் 33.4, வெட்டிக்காடு 8.0,

பேராவூரணி 7.2, ஆயன்குடி 42, ஒரத்தநாடு 27.2, நாகுடி 2.8, பட்டுக்கோட்டை 12.0, மதுக்கூர் 11.6, கோரையாறு 23.2 மில்லி மீட்டராகும்திருவாரூர் . மாவட்டம் : வலங்கைமான்48.1 மிம.ீ., குடவாசல் 25.2, நீடாமங்கலம் 18.0, நன்னிலம் 22.2, திருவாரூர் 1.8, முத்துப்பேட்டை 3.2, மன்னார்குடி 18.0, திருத்துறைப்பூண்டி 4.6 மில்லி மீட்டராகும்.

நாகை மாவட்டம்மயிலாடுதுறை : 220.0 மி.மீ., மஞ்சளாறு 99.2, மணல்மேடு 127.0, சீர்காழி 65.2, நாகை 3.0, தலைஞாயிறு 2.0, வேதாரண்யம் 15.2 மில்லி மீட்டராகும்.

டெல்டா மாவட்டங்களில் நேற்று முன்தினம் பெய்த மழையால், நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் தான் அதிகபட்சமாக, 220 மி.மீட்டர் மழையவு பெய்தது.

### விவசாயிக்கு பயிர் காப்பீடு தொகை வழங்க கோரிக்கை

திருத்துறைப்பூண்டி: "டெல்டா விவசாயிகளுக்கு, 2012-13ம் ஆண்டுக்கு பயிர் காப்பீடு தொகை நிபந்தனையின்றி வழங்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, காங்., விவசாய பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு காங்., விவசாய பிரிவு பொதுச்செயலாளர் நெடுவை ராஜதுரை கூறியதாவது:

தமிழக காவிரி டெல்டா பாசன விவசாயிகள், கடந்தாண்டு விவசாய பணிகளை மேற்கொண்டனர்இதில் ., இயற்கை இடர்பாட்டால் உற்பத்தி குறைந்தது. விவசாயிகளுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பை ஈடு செய்யும் வகையில், 2012-13ம் ஆண்டுக்கு பயிர் காப்பீடுத்தொகை செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்தாண்டு போதிய அளவு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் கிடைக்காமலும், மின்சாரம் தட்டுப்பாடு, வறட்சி காரணத்தால் விவசாயம் பாதித்தது. இந்நிலையில், விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் டெல்டா மாவட்டங்களிலுள்ள லட்சக்கணக்கான விவசாயிகள் பயன்பெறும் வகையில், இந்திய வேளாண் பயிர் காப்பீடு நிறுவனம், 741 கோடி ரூபாய் இழப்பீட்டு

தொகையை அனுமதித்துள்ளது.
ஆனால் இந்த தொகை இதுவரை விவசாயிகளுக்கு வந்து சேரவில்லை .
தொடர்ந்து, பல ஆண்டுகளாக விவசாய தொய்வால், பொருளாதார நெருக்கடியில் பாதித்துள்ள விவசாயிகளுக்கு, அனுமதிக்கப்பட்ட இழப்பீட்டு தொகையை உடனே இதனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பண்ணைக்குட்டைகள் அமைக்க விவசாயிகளுக்கு மானியம்

நத்தம் நத்தம் : பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவிரைவாக குறைந்து வருவதால், மழைநீரைச் சேமிக்கும் பொருட்டு பண்ணைக்குட்டைகள் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நத்தம் வேளாண்மை துறை உதவி இயக்குனர் ரவிபாரதி கூறியதாவது:
நத்தம் வட்டாரத்தில் கடந்த இரண்டாண்டாக மழைபெய்யாததாலும், இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழையளவு முற்றிலும் இல்லாததாலும், விவசாயக்கிணறுகள் வறண்டு விவசாயம் பாதித்துள்ளது.
இந்நிலையை போக்க அரசு, வேளாண்மைத்துறை சார்பாக பெய்யக்கூடிய பருவ மழை நீரை சேமித்து வைத்து நிலத்தடி
நீர்மட்டம் உயர்ந்து கிணறு களில்
நீர்ப்பாசன வசதியை பெற பண்ணைக்குட்டைகளை அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்குகிறது.
அதன்படி நத்தம் பகுதி விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் விவசாயக் கிணறுகள் மற்றும் நீர் நிலைகள் அருகில் 15 மீட்டர் நீளம் 7 அகலம் மீட்டர் மற்றும் 1 மீட்டர் ஆழத்தில் பண்ணைக்குட்டைகள் அமைக்க ரூ.4 ஆயிரம் மானியம் வழங்குகிறது.
விருப்பமுள்ள விவசாயிகள் நத்தம் வேளாண்மை விரிவாக்க மையத்தை நேரில் அணுகலாம், என்றார்.

### விதை கிராம திட்ட பயிற்சி முகாம்

திருவாடானை திருவாடானை : அருகே நகரிகாத்தானில், விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்ததுஊராட்சி . தலைவர் கருப்பையா தலைமை வகித்தார் . ஒன்றிய கவுன்சிலர் ராமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்வட்டார வேளாண் .

உதவி இயக்குநர் சீதாராஜ், விதை தரம், நலம் பேணுதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.

### விவசாயிகளுக்கு ரூ.69 கோடி வறட்சி நிவாரண நிதி வழங்கல்

காரைக்குடி சிவகங்கை : மாவட்டத்தில், ரூ.68.96 கோடி வரை விவசாயிகளுக்கு, வறட்சி நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளதாக, காரைக்குடியில் நடந்த கூட்டுறவு வார விழாவில்,கலெக்டர் ராஜாராமன் பேசினார்விவசாய :அவர் பேசியதாவது . உற்பத்தியை அதிகரிக்க, கூட்டுறவு சங்கங்கள் மூலம், 2011- 12ல் 19,142 விவசாயிகளுக்கு ரூ.44.77 கோடி; 2012-13ல் ரூ.56.83 கோடியும், 2013-14ம் ஆண்டுக்கு ரூ.60 கோடியும் கடன் தருவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுஅதில் ., கடந்த அக்டோபருடன், 4,361 விவசாயிகளுக்கு, ரூ.16.67 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில், 43 ஆயிரத்து 19 விவசாயிகளுக்கு, ரூ.118.27 கோடி வழங்கப்பட்டுள்ளதுஉரிய காலத்தில் ., பயிர்கடன்களை திருப்பி செலுத்திய, விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு, ரூ.1.57 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டன.

மாவட்டத்தில் கடந்த அக்.31 வரை 1 லட்சத்து 54 ஆயிரத்து 274 விவசாயி களுக்கு, ரூ.68.96 கோடி வரை வறட்சி நிவாரணத் தொகை வழங்கப்பட்டு உள்ளது, என்றார்.

கூட்டத்தில், 56 பேருக்கு ரூ.31.36 லட்சத்திற்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மாநில பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு வாரிய தலைவர் செந்தில்நாதன், கூட்டுறவு இணை பதிவாளர் பிரபு, மத்திய கூட்டுறவு வங்கி இணை பதிவாளர் உமா மகேஸ்வரி, குணசேகரன் எம்.ஏ.எல்., நகராட்சி தலைவர் கற்பகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக மக‹ல் பெற்றிடலாம் வேளாண் உதவி இயக்குநர் ஆலோசனை

ஆறுமுகநேரி: திருச்செந்தூர் வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக மக‹ல் பெற்றிட வேளாண் உதவி இயக்குநர் ஆலோசனை வழங்கியுள்ளார். இதுகுறித்து திருச்செந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரமநாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, திருச்செந்தூர் வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்திட அரசு மானியம் ஒரு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் வீதம் வழங்கப்படுகிறது திருந்திய நெல் சாகுபடிக்கு அரசு மானியமாக .1 ஏக்கருக்கு நடவு மானியமாக ரூ ஆயிரத்து .500ம் மற்றும் நெல் சாகுபடிக்குரிய இடுபொருள் நெல் நுண்ணூட்டம் உரம் 12 கிலோ அசோஸ்பைரில்லம் 25 பாக்கெட், பாஸ்போபாக்டீரியா 25 பாக்கெட், அசாரிக்டன் மருந்து, அமினோ அகிட்டு . மற்றும் இலை வண்ண அட்டை போன்ற பொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. திருந்திய நெல் சாகுபடியில் தொழில் நுட்பம் :14 நாள் வயதுடையது நெல் நாற்றை எடுத்து ஒரு நாற்று வீதம் நடவு செய்தல்சதுர . முறையில்12.5ஓ22.5 செநடவு வயலை .இடைவெளியில் நடவு செய்தல் .மீ. சரியாக லேசர் முறையில் கொண்டு சமப்படுத்துதல்நெல் நட்ட பயிருக்கு இ .லை வண்ண அட்டை கொண்டு யூரியா உரம் பயிர் தேவைக்கு ஏற்ப உரமிடுதல். தேவைக்கு ஏற்ப நெல் பயிர் பாதுகாப்பு இயற்கை பூச்சி மருந்தாக உபயோகத்தில், ஏக்கருக்கு 500 கிலோ முதல் ஆயிரம் கிலோ வரை கூடுதல் மக‹ல் கிடைத்திட நல்ல வாய்ப்பு உள்ளது. திருந்திய நெல் சாகுபடி அதாவது வரிசை நடவு செய்து அதிக மக‹ல் பெற்றிடுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் பிரமநாயகம் தெரிவித்துள்ளார்.

## குமரி மாவட்டத்தில் தொடர் மழை அறுவடை பணிகள் பாதிப்பு :

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் பெய்துவரும் மழையால்,. அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது தென்னை குமரி மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக கனமழை பெய்து வருகிறதுஅணைப்பகுதிகளில் போதிய மழை இருப்பதால் . அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறதுகுமரி மாவட்டத்தில் பெய்து வரும் .

மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்நேற்றைய நிலவரப்படி . பேச்சிப்பாறையில் 25.35 அடியும், பெருஞ்சாணியில் 60.35 அடியும் தண்ணீர் உள்ளது இதைப்போன்று சிற்றார் .1ல் 9.61 அடியும், சிற்றார் 2ல்9.71 அடியும், பொய்கையில் 3 அடியும், மாம்பழத்தாறில் 40.68 அடி தண்ணீர் உள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு உள்வரத்தாக 160 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது பெருஞ்சாணிக்கு .342கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது சிற்றார் ஒன்று அணைக்கு .39கனஅடி தண்ணீரும், சிற்றாறு 2க்கு62 கனஅடி தண்ணீரும் வந்து கொண்டு இருக்கிறதுமழையளவு நேற்றைய . நிலவரபடி குமரி மாவட்டத்தில் பெருஞ்சாணி பகுதியில் 10.6,மி.மீ., சிற்றாறு 1ல் 7.6 2ல் 6.6 இரணியலில் 21மி.மீ., ஆனைகிடங்கில் 18மிமீ.,குளச்சலில் 37.6மி.மீ., குருந்தன்கோட்டில் 20மிமீ.,, அடையாமடையில் 1மி.மீ.,, நாகர்கோவிலில் 2.4மி.மீ., பூதப்பாண்டியில் 11.8மி.மீ., சுருளோட்டில் 46மி.மீ., கன்னிமாரில் 61.6மிமீ., ஆரல்வாய்மொழியில் 55மிமீ., பாலமோரில் 2.2மிமீ., கொட்டாரம் பகுதியில் 25.8மி.மீ., திற்பரப்பில் 3.2மி.மீ.,புத்தன்அணையில் 26.மி.மீ., மழையும் பதிவானதுகுமரி மாவட்டத்தில் நேற்று முன் தினம் முதல் . நல்ல மழை பெய்தது . குமரியில் பெய்து வரும் மழையால் கிணறுகள், குளங்கள் நிரம்பிவருகிறது . இந்நிலையில் பல்வேறு பகுதிகளில் கும்பப்பூ சாகுபடி பணிகள் தீவிர வீச்சில் விவசாயிகள் துவக்கியுள்ளனர்ஆனால் கடந்த கன்னிப்பூ . சாகுபடிக்கான அறுவடை பணிகள் சில பகுதிகளில் முடிவடைந்தாலும், சில பகுதிகளில் நெற்பயிர்கள் தண்ணீரில் தத்தளித்து கொண்டு இருக்கிறதுகடந்த . நான்கு நாட்களாக பெய்த மழையால் வயல்கள் அறுவடை செய்ய முடியாமல் நெல் முளை விட துவங்கியுள்ளதால், விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்வயலில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள். முளைவிட்டுள்ளதுசேதமான .இதனால் விவசாயிகள் ஏக்கத்துடன் உள்ளனர் . ரோடுகள்;-பெய்து வரும் மழையால் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ரோடுகள் சேதமான நிலையில் காணப்படுகிறதுபல இடங்களில் ரோடுகளில் குளம் போல் . தண்ணீர் தேங்கி நிற்கிறதுரோடு எது ., பள்ளம் எது என்று தெரிய முடியாமல்

இருசக்கரவாகன ஓட்டிகள், மற்றும் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்மழைபெய்து வருவதால் உள்வரத்து அதிகரித்து வருவதால் இன்னும் . சில நாட்களில் அணை நீர்மட்டம் நன்கு உயரும் வாய்ப்புள்ளது.

## கனமழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில், நேற்று முன்தினம் இரவு, கன மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வங்க கடலில் ஏற்பட்ட புயல் சின்னம் நாகை அருகே கரையை கடந்ததுபுயல் . காரணமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பரவலாக கன மழை பெய்ததுநேற்று . முன்தினம் காலை, ஆரம்பித்த மழை நள்ளிரவு வரை தொடர்ந்து பெய்து கொண்டே இருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவில், ஊத்தங்கரை, மத்தூர், போச்சம்பள்ளி, பாரூர் ஆகிய சுற்றுவட்டார பகுதியில் கன மழை பெய்தது . மாவட்டத்தில் அதிக பட்சமாக ஊத்தங்கரையில், 94.20 மி.மீ., மழை பதிவானது . இதனையடுத்து மாவட்டத்தில் பெய்த மழை அளவு, வருமாறுபோச்சம்பள்ளி ., 91.30 மி.மீ., பெனுகொண்டாபுரம், 85.40, பாரூர், 79.80, நெடுங்கல், 72.40, கிருஷ்ணகிரி, 48, ராயக்கோட்டை, 34, அஞ்செட்டி, 30, தேன்கனிக்கோட்டை, 25, தளி, 20, சூளகிரி, 15, ஓசூர், 14 மி.மீ., பதிவானதுமாவட்டத்தில் ., நேற்று முன்தினம் மொத்தம், 609.10 மி.மீ., மழை பதிவானது.

பொதுவாக ஊத்தங்கரை, போச்சம்பள்ளி, பாரூர் சுற்றுவட்டார பகுதியில் போதிய மழை இல்லாமல் மார மரங்கள் காய்ந்து வந்தது. நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் மாந்தோட்டங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதால், மா மரங்கள் கருகுவது குறையும் வாய்ப்பு, ஏற்பட்டுள்ளது.

## விவசாயிகள் சங்க ஒன்றிய மாநாடு

கிருஷ்ணகிரிதமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மத்தூர் ஒன்றிய மாநாடு : .மத்தூரில் நடந்தது
கனகராஜ் தலைமை வகித்தார்மாநாட்டை துவக்கி வைத்து விவசாயிகள் .

சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட செயலாளர் கண்ணு பேசினார்மாநில . துணை தலைவர் லகுமையா, மாநிலக்குழ உறுப்பினர்கள் வெங்கடாசலம், ராஜேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்மாநாட்டில் புதிய ஒன்றிய . தலைவராக மகேந்திரன், செயலாளராக சீனிவாசன், பொருளாளராக சுந்தர வடிவேலு ஆகியோர் உள்பட, 11 நிர்வாகிகள் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

"60 வயது நிறைவடைந்த அனைத்து விவசாயிகளுக்கும் மாதம், 3 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும்மத்தூர் பகுதியில் காய்ந்து போன மா ., தென்னை உள்ளிட்ட மஙர்களை கணக்கெடுத்து அதற்கான இழப்பீடு தொகை வழங்க வேண்டும்விவசாயிகளுக்கு விதை ., உரங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்க வேண்டும்' ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட துணை செயலாளர் சிவராஜ், வட்ட துணை தலைவர் தேவராஜ், இந்திய கம்யூ., மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, நரசிம்மன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.சிங்காரம் நன்றி கூறினார் .

## கோமாரி நோய் விழிப்புணர்வு கருத்தரங்கம்

சென்னிமலைசென்னிமலையில் கோமாரி நோய் விழிப்புணர்வு கருத்தரங்கம் :, அஸ்வத் தொண்டு நிறுவனம் சார்பில் நடந்தது.

சென்னிமலை அடுத்த பனியம்பள்ளி பஞ்சாயத்தில், நபார்டு வங்கி, ஈரோடு மாவட்ட தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னிமலை அஸ்வத் தொண்டு நிறுவனம் சார்பில், கோமாரி நோய் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.

தொண்டு நிறுவன மேலாண்மை இயக்குனர் செல்வராஜ் தலைமை வகித்தார். ஈரோடு மாவட்ட நபார்டு வங்கி துணைப்பொது மேலாளர் சந்தானம், பனியம்பள்ளி பஞ்சாயத்து தலைவர் சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் . முருகன் உழவர் மன்ற கூட்டமைப்பு தலைவர் ராஜேந்திரன் வரவேற்றார். ஈரோடு மாவட்ட தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியை யசோதை பேசியதாவது:

கோமாரி நோய் பரவுவதால், ஒவ்வொரு கால்நடையையும் முழுமையாக கவனிக்க வேண்டும்நோய் . தொற்று இருந்தால், கால்நடை டாக்டர் மூலம் சிகிச்சை வழங்க வேண்டும்பிற . கால்நடைகளுடன், தொற்று உடைய கால்நடையை சேர்க்காமல், தனியாக பராமரிக்க வேண்டும்அறிகுறிகள் தென்பட்டதும் சிகிச்சை வழங்கினால் ., இறப்பில் இருந்து தடுக்கலாம்.

கால்நடைத்துறை மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறதுஇவற்றை முறையாக பயன்படுத்திக்கொள்ள . வேண்டும், என்றார்.

சென்னிமலை, பெருந்துறை பகுதி விவசாயிகள், 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்அன்னை உழவர் மன்ற கூட்டமைப்பு செயலாளர் சீனிவாசன் . உட்பட பலர் பங்கேற்றனர்.

அஸ்வத் செயலாளர் தங்கமணி நன்றி கூறினார்.

## நீலகிரி தேயிலையை வாங்க ஏற்றுமதி வர்த்தகர்கள் ஆர்வம் பல மாத இடைவெளிக்கு பின் திடீர்'" மாற்றம்

ஊட்டிநீலகிரி தேயிலையை வாங்குவதில்:, பல மாத இடைவெளிக்கு பிறகு, ஏற்றுமதி வர்த்தகர்கள், திடீர் ஆர்வம் காட்டி உள்ளனர்நீலகிரி மாவட்ட தேயிலை . தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும், தேயிலை தூள் வாரந்தோறும், "குன்னூர் தேயிலை வர்த்தர்கள் சங்க ஏல மையம்' மூலம் விற்கப்படுகிறது.

உள்நாட்டு வர்த்தகம் தவிர, பாகிஸ்தான், ரஷ்யா, ஐரோப்பா, வங்கதேசம், கிழக்காசிய நாடுகள் அதிகளவு, நீலகிரி தேயிலை தூளை கொள்முதல் செய்து வந்தன. கடந்த இரு மாதமாக, குன்னூர் தேயிலை ஏல மையத்தில், ஏற்றுமதி வர்த்தகர்களின் பங்களிப்பு குறைவாக இருந்தது.

தொடர் தேக்கம்

"தேயிலை சாகுபடி செய்யும் நாடுகளில், உற்பத்தி அதிகரித்து, 12 கோடி கிலோ தேயிலை தூள், உலக சந்தையில் தேக்கமடைந்ததன் காரணமாக, ஏற்றுமதி வர்த்தகர்கள், நீலகிரி தேயிலை மீது கவனம் காட்டவில்லை' என, கூறப்பட்டது .

தவிர,"பாகிஸ்தான், எகிப்து போன்ற நாடுகளில் நிலவிய அரசியல் நெருக்கடி, கடும் பனிப்பொழிவு காரணமாக, ரஷ்யாவில் நீர் வழி போக்குவரத்து பாதிக்கப்பட்டதும், இதற்கு காரணம்' என, கூறப்பட்டதுஇதனால் ., கடந்த இரு மாத காலமாக, குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், வாரந்தோறும் விற்பனைக்கு வந்த தேயிலை தூளில், 35- 45 சதவீதம் தேக்கமடைந்தது.

திடீர் கிராக்கி ஆனால், இந்த வாரம் நடந்த தேயிலை ஏலத்தில், ஏற்றுமதி வர்த்தகம் கை கொடுத்ததால், விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 92 சதவீதம் விற்று தீர்ந்தது.

இது குறித்து சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் கூறுகையில்,""குன்னூர் தேயிலை ஏல மையத்தில், வாரந்தோறும் 3 - 6 கோடி கிலோ தேயிலை தூள் தேக்கமடைந்ததால், "எப்படியாவது தேயிலை தூளை விற்றாக வேண்டும்' என்ற கட்டாயம் வர்த்தகர்களுக்கு ஏற்பட்டதுஅதற்கேற்ப ., ஏற்றுமதி வர்த்தகர்களும், குறைந்த விலைக்கு தேயிலை தூளை வாங்குவதில் ஆர்வம் காட்டினர்இதனால் ., அதிக விலைக்கு விற்பனையாகும் தேயிலை கூட, குறைந்த விலைக்கு ஏலம் எடுக்கப்பட்டதுபொதுவாக ., கிலோ 74 ரூபாய்க்கு விலை போக கூடிய தேயிலை தூள், இந்த வாரம் 64 ரூபாய்க்கு மட்டுமே விற்கப்பட்டது; தரமான தேயிலை தூளுக்கு கூட குறைந்த விலையே கிடைத்ததுதேக்கத்தை தவிர்க்க., வேறு வழியின்றி வர்த்தகர்கள் குறைந்த விலைக்கு, தேயிலை தூளை விற்று வருகின்றனர்," என்றார்.

## மதுராந்தகத்தில் 112 மி.மீ., மழை

காஞ்சிபுரம்மதுராந்தகத்தில்:, 112 மி.மீ., மழை பதிவாகி உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும், நேற்று முன்தினம் இரவு பரவலாக, மழை பெய்தது. அதிக அளவாக மதுராந்தகம் பகுதியில், 112 மி.மீ., உத்திரமேரூர், 65 மி.மீ., மாமல்லபுரம், 59 மி.மீ., செங்கல்பட்டு, 58 மி.மீ., காஞ்சிபுரம், 55.4 மி.மீ.,

ஸ்ரீபெரும்புதுார், 47 மி.மீ., திருக்கழுக்குன்றம், 36.8 மி.மீ., செய்யூர், 33 மி.மீ., கேளம்பாக்கம், 32 மி.மீ., மழை அளவு பதிவாகி உள்ளது.

கனமழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

## தொடர் மழை :500 ஏக்கர் வேர்க்கடலை பயிர் தண்ணீரில் மூழ்கியது

திருத்தணிஇரு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால்:, திருவாலங்காடு ஒன்றியத்தில், 500

ஏக்கர் வேர்க்கடலை பயிர் தண்ணீரில் மூழ்கியதுஇதனால் ., விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

திருவாலங்காடு ஒன்றியம், பொன்பாடி, நெமிலி, நல்லாட்டூர், லட்சுமாபுரம், ஆற்காடுகுப்பம், ரகுநாதபுரம், பனப்பாக்கம் உள்பட 20 கிராமங்களில், 1,500க்கும் மேற்பட்ட விவசாயிகள் வேர்க்கடலை பயிர் செய்துள்ளனர்.

பயிர்கள் நாசம் சில விவசாயிகள், கடந்த, 10 நாட்களுக்கு முன்பு தான் வேர்க்கடலை நிலத்தில் போடப்பட்டு (பருப்பு), தற்போது முளைத்து உள்ளது. இந்நிலையில், வங்க கடலில் ஏற்பட்டுள்ள காற்று அழுத்த தாழ்வு மண்டலத்தால், திருத்தணி, திருவாலங்காடு மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில், கடந்த இரண்டு நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறதுஇந்த மழையால் ., வேர்க்கடலை பயிரிட்ட நிலத்தில் மழைநீர் தேங்கி நிற்பதால், பயிர் நாசமானது. திருவாலங்காடு ஒன்றியத்தில் மட்டும், 500 ஏக்கர் வேர்க்கடலை பயிர் தண்ணீரில் மூழ்கியது. இதனால் கடன் வாங்கி பயிர் செய்த விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளனர். நிவாரணம் இது குறித்து ஆற்காடுகுப்பம் பகுதியைச் சேர்ந்த விவசாயி, ராஜேந்தின் கூறுகையில், 'இரு தினங்களாக பெய்த தொடர் மழையால், வேர்க்கடலை பயிர், முழுவதும் தண்ணீரில் மூழ்கியதுவேர்க்கடலை பயிர் . செய்வதற்காக, ஆந்திராவிற்கு சென்று விதைகள் பருப்ப)ு.வாங்கி வரப்பட்டது (

தற்போது, வேர்க்கடலை பயிர் தண்ணீரில் மிதந்ததால், நஷ்டம் ஏற்பட்டுள்ளது . அரசு நிவாரண உதவி வழங்க வேண்டும்,' என்றார்.

### தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வரத்து துவக்கம்

திருக்கோவிலூர்திருக்கோவிலூர் தென்பெண்ணை ஆற்றில் திடீரென வெள்ளம் : .ஏற்பட்டது

விழுப்புரம் மாவட்ட எல்லையான மூங்கில்துறைப்பட்டு, ஜம்பை, சாங்கியம் உள்ளிட்ட தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்ததுமேலும் கல்வராயன் மலையில் பெய்த மழைநீர் . மூங்கில்துறைப்பட்டு பகுதி தென்பெண்ணை ஆற்றில் நேற்று காலை கலந்தது. இதனால் தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது நேற்று மாலை . 4.30 மணிக்கு வெள்ளநீர் திருக்கோவிலூரை வந்தடைந்ததுதரைப்பாலத்தில் . உள்ள மதகு வழியாக தண்ணீர் ஆர்பரித்து ஓடியது.

நேற்று முன்தினம் மாலையில் இருந்து திருக்கோவிலூர் பகுதியில் மழை நின்றுவிட்ட நிலையில், நேற்று மாலை தென்பெண்ணையில் திடீரென மழை வெள்ளம் ஏற்பட்டதால், பொதுமக்கள் ஆச்சரியமடைந்தனர்.

நீண்ட நாட்களாக வறண்டுகிடந்த தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வரத்து துவங்கியதால், இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேலும், கூட்டுகுடிநீர் திட்டம் மற்றும் தென்பெண்ணை ஆற்றை ஒட்டியுள்ள விவசாயிகள், தண்ணீர் பிரச்னை இன்றி சிறிது காலம் விவசாய பணிகளை மேற்கொள்ள முடியும்.

### சிறிய வெங்காயம் விலை உயர்வு தியாகதுருகத்தில் சாகுபடி தீவிரம்

தியாகதுருகம்தியாகதுருகம் பகுதியில் சில விவசாயிகள் சிறிய வெங்காயம்: சாகுபடி செய்துள்ள நிலையில் இதன் விலை உயர்ந்து வருவதால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தியாகதுருகம் பகுதியில் விவசாயிகள் சிலர் காய்கறி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்கத்திரி ., வெண்டை, தக்காளி, மிளகாய், பாகற்காய், பீர்க்கன், புடலை, கருணைக்கிழங்கு, சுரைக்காய் உள்ளிட்ட காய்கறிகளின் பட்டியலில், வெங்காயம் பயிரிடுவதும் தற்போது இணைந்துள்ளது.

மூன்று மாதத்தில் பலன் தரும் வெங்காயம் பயிரிட விதைப்பு வெங்காயம் வாங்குவதற்கு மட்டுமே அதிக செலவு ஆகிறதுஒரு ஏக்கர் . நிலத்திற்கு 200 கிலோ விதை வெங்காயம் தேவைப்படுகிறதுஊட்டச்சத்து உரங்களை . தூவி, மருந்து தெளித்து தண்ணீர் பாய்ச்சி பராமரிக்கப்படுகிறது.

செடிகள் வளர்ந்து 90 நாட்களில் அறுடைக்கு தயாராகிறதுநல்ல மகசூல் . கிடைக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கரில் குறைந்தது 2,000 கிலோ வெங்காயம் வரை அறுவடை செய்ய முடியும்தற்போது இதற்கு நல்ல விலை கிடைத்து வருவத .ால் பயிரிட்ட விவசாயிகளுக்கு கூடுதல் லாபத்தை ஈட்டித்தரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தியாகதுருகம் பகுதியில் குறைந்த பரப்பில் மட்டுமே வெங்காயம் சாகுபடி செய்கின்றனர்இவர்களுக்கு போதிய ஆலோசனைகள் . வழங்கி ஊக்குவித்தால் வெங் காயம் பயிரிடுவதன் மூலம் விவசாயிகள் நல்ல பலனை அடைய முடியும்.

## விடிய விடிய மழை விவசாயிகள் மகிழ்ச்சி

கச்சிராயபாளையம்கச்சிராயபாளையம் பகுதியில் நல்ல மழை பெய்ததால் : .விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

வங்க கடலில் உருவான புயல் காரணமாக கச்சிராயபாளையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் இரவில் இருந்தே மழை பொழிய துவங்கி நேற்று முன்தினம் முழுவதும் நல்ல மழை பெய்தது இப்பகுதியில் .59 மிமீ மழை பதிவாகி. உள்ளதுவடகிழக்கு பருவ .இதனால் வயல்வெளிகளில் தண்ணீர் நிரம்பி உள்ளது . மழை தொடங்கியும் போதிய மழை இல்லாமல் சம்பா சாகுபடி கேள்வி குறியாக இருந்த நிலையில் இப்பகுதி விவசாயிகளுக்கு இந்த மழை பெரும் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் அளித்துள்ளது.

## கோமாரி நோய் தாக்குதல் எதிரொலி கால்நடை சந்தைகள் தற்காலிகமாக நிறுத்தம்

சேலம்: சேலம் மாவட்டத்தில் இயங்கி வந்த ஆடு மற்றும் மாட்டு சந்தைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். கலெக்டர் மகரபூஷணம் வெளியிட்ட அறிக்கை:

சேலம் மாவட்டத்தில், கோமாரி நோய் தாக்குதல் ஏற்பட்டு, எட்டு கால்நடைகள் இறந்துள்ளனசேலம் மாவட்டத்தில் .ஆறு கால்நடைகள் பாதிக்கப்பட்டும் உள்ளது . முத்துநாயக்கன்பட்டி, வீரகனூர், பெருமாகோயில் மற்றும் மின்னாம்பள்ளி

உள்ளிட்ட அனைத்து கால்நடை சந்தைகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டதுவெளிமாவட்டங்களில் இருந்து ., சேலம் மாவட்டத்துக்கு வாகனங்கள் மூலம் கொண்டு வரும் கால்நடைகளால், கோமாரி நோய் தாக்கம் ஏற்படக்கூடும் என்பதால், வாகனங்களில், கால்நடைகளை கொண்டு வருவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வளர்க்கும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுப்பதற்காக, கால்நடைகள் கட்டி வைக்கும் கொட்டகைகளை சுற்றி சலவை சோடா, பிளீச்சிங் பவுடர் தூவி நோய்க் கிருமிகளை அழிக்க வேண்டும்.

கிரமங்கள் தோறும் நடைபெறும் மருத்துவ முகாமில், கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு, நோய் வராமல் தடுக்க வேண்டும்.

கோமாரி நோய் பாதிக்கப்பட்டு, இறந்த கால்நடைகளை புதைக்கவோ, எரிக்கவோ வேண்டும். இறந்த கால்நடைகளை பொது நீர் நிலைகளிலோ, கால்வாய், ஏரி, குளம் குட்டைகளிலோ போடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கோமாரி நோய் தென்பட்டால், அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களுக்கு சென்று இலவச சிகிச்சை மேற்கொள்ளலாம்பாதிக்கப்பட்ட கால்நடைகளில் வாய் . மற்றும் கால் குளம்புகளை பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசல் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். கால்நடைகள் பட்டினியால் இறப்பதை தவிர்க்க ராகிக்கூழ், தேன் ஆகியவற்றை வாய் வழியாக கொடுக்கலாம்.

கோமாரி நோய் தடுப்பு தொடர்பாக, ஒவ்வொரு வட்டாரத்திலும் அப்பகுதியை சேர்ந்த கால்நடை உதவி மருத்துவர், ஊராட்சி மன்றத் தலைவர், கிராம நிர்வாக அலுவலர், பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் அடங்கிய ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும்.

தாலுகா அளவில் உதவி இயக்குனர், வட்டார வளர்ச்சி அலுவலர், தாசில்தார் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, 10 நாட்களுக்கு, ஒருமுறை கூட்டம் நடத்த வேண்டும்மாவட்ட அளவில் ., கலெக்டர் தலைமையில் மண்டல இணை இயக்குனர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு,

வாரந்தோறும் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### தேங்காய் உற்பத்தி குறைவால் தொழிலாளர்கள் பெரும் தவிப்பு

நங்கவள்ளி: தேங்காய் உற்பத்தி, எப்போதும் இல்லாத வகையில், மிகவும் குறைந்ததால், தேங்காய் தொழிலாளர்கள் வேலையின்றி, பெரும் தவிப்புக்குள்ளாகி வருகின்றனர்.
ஜலகண்டாபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், தேங்காய் மண்டி அதிகளவில் உள்ளது. இத்தொழிலை நம்பி, ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றனர்கடந்த ஆண்டு ., தேங்காய் உற்பத்தி நன்றாக இருந்ததால், நூற்றுக்கும் மேற்பட்ட மண்டிகளிலிருந்து, நாள் ஒன்றுக்கு, 10 லட்சத்துக்கும் மேற்பட்ட தேங்காய்கள், வட மாநிலங்களுக்கு ஏற்றமதி செய்யப்பட்டது.
தொடர்ந்து, பருவமழை பொய்த்ததால், ஏராளமான தென்னை மரங்கள் காய்ந்ததோடு, நடப்பு ஆண்டில் தேங்காய் உற்பத்தியும், 75 சதவீதம் குறைந்து விட்டதுதேங்காய் உற்பத்தி குறைவால் ., எப்போதும் இல்லாத வகையில், தேங்காய் விலை உச்சத்தில் இருந்தாலும், இத்தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்கள், தற்போது வேலையின்றி தவித்து வருகின்றனர்.
மண்டிகளில் தேங்காய் உரிப்பதற்கு, உள்ளூரில் ஆட்கள் கிடைக்காமல், வெளியூர் மட்டுமன்றி, வெளி மாநிலங்களிலிருந்தும் ஆட்களை அழைத்து வந்து தேங்காய் உரித்த காலம்போய், தற்போது உள்ளூர் தொழிலாளர்கள், அன்றாட ஜீவனம் நடத்த, போதிய வருமானமின்றி தவித்து வருகின்றனர்.
ஒருசில தேங்காய் மண்டி உரிமையாளர்கள், வெளி மாவட்டங்களிலிருந்து தேங்காயை வாங்கி வருகின்றனர்தேங்காய் வந்தவுடன் ., தொழிலாளர்கள் திரண்டு வந்து, சிறிது நேரத்தில், தேங்காய்கள் அனைத்தையும் உரித்து முடித்து விடுகின்றனர். மீதி தொழிலாளர்கள், வேலையின்றி தவித்து வருகின்றனர்.

## வாழப்பாடி சுற்றுப்புற பகுதியில் கடும் வறட்சி : பாக்கு மட்டை தட்டு விலை உயர்வு

வாழப்பாடிவாழப்பாடி பகுதியில் ஏற்பட்டுள்ள வறட்சியால் :, பாக்கு மட்டைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. வாழப்பாடி அடுத்த புழுதிக்குட்டை ஆணைமடுவு அணை, பாப்பநாயக்கன்பட்டி கரியகோவில் அணை பாசனம் பெரும் கிராமங்கள் மற்றும் வெள்ளாறு, வசிஷ்டநதி ஆற்றுப்படுகை கிராமங்களிலும், 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில், நீண்டகால பலன் தரும் பாக்கு மரங்களை, விவசாயிகள் வளர்த்து வருகின்றனர்.

அதனால், வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்கள், மாநில அளவில், பாக்கு உற்பத்தியில், முக்கிய பங்கு வகிக்கின்றனவாழப்பாடி பகுதியில் உற்பத்தி . செய்யப்படும், "ஆப்பி' என குறிப்பிடப்படும் கொட்டைப்பாக்கு, தமிழகத்தில், கும்பகோணம், சிதம்பரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை பகுதியிலுள்ள பிரபல பாக்கு கம்பெனிகளுக்கும், குஜராத், பீஹார், மத்தியபிரதேசம், உத்தரபிரதேஷம் உள்ளிட்ட வடமாநில பான்பராக், பான்மசாலா, குட்கா தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் ஆண்டு தோறும் ஏற்றுமதியாகிறது.

பாக்குமரத்தில் இருந்து உதிர்ந்து விழும் மட்டைகளை பதப்படுத்தி தயாரிக்கப்படும் உணவு தட்டுகள், டீ கோப்பைகள், டம்ளர்கள் மற்றும் பல்வேறு வடிவ கிண்ணங்கள், சிற்றுண்டி பிளேட்டுகள் ஆகிவற்றுக்கும், நாடு முழுவதும், நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

அதனால், வாழப்பாடி பகுதியில் மட்டுமின்றி, சேலம், ஈரோடு, கோவை, பொள்ளாச்சி, மதுரை உட்பட மாநிலத்தில் பல்வேறு பகுதியில், பாக்கு மட்டை தட்டு உற்பத்தி செய்யும் தொழில், அசுர வளர்ச்சி அடைந்துள்ளது.

அதனால், பாக்கு தோப்புகளில் உதிர்ந்து விழும் பாக்கு மட்டையை சேகரித்தல், பதப்படுத்துதல், கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல், மிஷின்களை இயக்கி பாக்கு தட்டு தயாரித்தல் ஆகியவற்றால், நேரடியாகவும், மறைமுகமாகவும், 20

ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், வாழப்பாடி பகுதியில், இரு ஆண்டுகளாக கடும் வறட்சி நிலவி வருவதால், பாசன வசதியின்றி, ஏராளமான பாக்குமரங்கள் காய்ந்து கருகியது . எஞ்சிய மரங்களிலும், எதிர்பார்த்த அளவுக்கு, பாக்கு மகசூல் கிடைக்கவில்லை . பாக்கு மட்டைகளும், அளவில் சிறுத்து, தரம் குறைந்து உதிர்ந்து வருகின்றன. அதனால், பாக்கு மட்டைகளுக்கு, கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை இரு மடங்காக உயர்ந்துள்ளதுகடந்தாண்டு ., 100 முதல், 150 ரூபாய்க்கு விலை போன, 100 பாக்கு மட்டைகள், தற்போது தரத்துக்கேற்ப, ஒரு மட்டை மூன்று ரூபாய் வரை விற்கப்படுகிறதுஅதனால் ., பாக்கு மட்டை தட்டுகளின் விலையும் இரட்டிப்பானது.

சில மாதங்களுக்கு முன்வரை, இரண்டு ரூபாய்க்கு விற்ற பாக்கு மட்டை தட்டுகள், அளவுக்கேற்ப தற்போது, மூன்று முதல் நான்கு ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

""நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நல்ல மழை பெய்தால், 2014 ஜனவரி மாதத்துக்கு மேல் அதிகளவில் பாக்கு மட்டைகள் கிடைக்க வாய்ப்புள்ளது," என, படையாச்சூர் பாக்கு மட்டை வியாபாரி கர்ணன் தெரிவித்தார்.

### மழைப் பொழிவால் விவசாயிகள் மகிழ்ச்சி

பள்ளிபாளையம்நாமக்கல் மாவட்டத்தில் பெய்துள்ள மழையால் :, நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில், இரண்டு ஆண்டுகளாக வறட்சி நிலவியதால், நெல் உள்ளிட்ட பயிர் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்ததுஅதனால் ., குறைந்த அளவு தண்ணீர் வசதி உள்ள விவசாயிகளும், நெல் சாகுபடி செய்வதை புறக்கணித்தனர்இந்நிலையில் ., வடகிழக்கு பருவமழை, மேட்டூர் தண்ணீர் திறப்பு ஆகியவற்றால், நெல் சாகுபடி பணியை, சில வாரங்களுக்கு முன், விவசாயிகள் துவக்கினர்நாமக்கல் . மாவட்டத்தின் காவிரிக் கரையோரங்களில் மட்டுமே, நெல் சாகுபடி நடக்கிறது .

பள்ளிபாளையம், ஆவத்திபாளையம், புதுப்பாளையம், வெப்படை, குப்பாண்டபாளையம், சீராமபாளையம், சமயசங்கிலி, மாம்பாளையம், ரங்கனூர், மோகனூர், ஜேடர்பாளையம், மொளசி உட்பட்ட பகுதிகளில், பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதுநேற்று. முன்தினம், தொடர்ந்து பெய்த மழையில், நெல் பயிர்கள் பச்சை வண்ணம் போர்த்தியது போல் செழுமையாக பரந்து விரிந்துள்ளதுபோதிய அளவு தண்ணீர் . கிடைப்பதால், நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்வரும் . தை மாதத்தில், அறுவடை செய்ய வாய்ப்புள்ளதாக, அவர்கள் தெரிவித்தனர்.

### விவசாயிக்கு பயிர்கடன் இலக்கு ரூ .210 கோடிகலெக்டர் தகவல் :

நாமக்கல்: ""நாமக்கல் மாவட்டத்தில், கூட்டுறவு சங்கங்கள் மூலம், விவசாயிகளுக்கு, நடப்பாண்டு, 210 கோடி ரூபாய் பயிர்கடன் வழங்க இலக்கு நிர்ணயக்கப்பட்டுள்ளது," என, கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.
தமிழகத்தில், 60வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா கொண்டாடப்பட்டு வருகிறதுஅதன்படி ., நாமக்கல் மாவட்டத்தில், நேற்று, கூட்டுறவு வார விழா கலை நிகழ்ச்சிகளுடன் துவங்கியதுமாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி பங்கேற்று . :பேசியதாவது

தேசிய அளவில், தமிழகத்தில்தான், கூட்டுறவு சங்கங்கள், முதன் முதலாக துவங்கப்பட்டு, நாடு முழுவதற்கும், முன்னோடி திட்டம் செயல்படுத்தப்பட்டது. கிராம பொருளாதாரத்தை மையமாக கொண்டு, பல திட்டங்களை செயல்படுத்தி வரும் கூட்டுறவு சங்கங்கள், விவசாயி, நெசவாளர், அமைப்புசாரா தொழிலாளர் என அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நிறுவனமாக செயல்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, 277 கூட்டுறவு சங்கங்களில், ஆறு லட்சத்து, 33 ஆயிரம் உறுப்பினர்கள் உள்ளனர்அவர்களின் மேம்பாட்டுக்காக ., தொழில் வசதி, கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறதுநடப்பாண்டு மட்டும் ., விவசாய பயிர்

கடன் வழங்க, அரசு, 210 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதுஅதில் ., கடந்த மாதம் வரை, 133 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பொது சேவை மையங்கள் மூலம், கம்ப்யூட்டர் சிட்டா, பட்டா, மின்கட்டணம் உள்ளிட்ட சேவைகள் மூலம், கடந்தாண்டு, 17 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதுவிவசாயிகளுக்கு . இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும், விவசாய சேவை மையமும் செயல்படுகிறது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ், 851 கடைகள் கூட்டுறவு சங்கங்களின் கீழ் இயங்கி வருகிறதுகூட்டுறவு துறையில் பணியாற்றும் நிர்வாகிகள் மற்றும் . ஊழியர்கள் பொறுப்புடன் செயல்பட்டு, கூட்டுறவு அமைப்புக்கு வலு சேர்க்க வேண்டும்மண்டல இணைப் பதிவாளர் .இவ்வாறு அவர் பேசினார்.

முத்துக்குமாரசாமி, நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு தலைவர் சுப்ரமணியம், சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றிய தலைவர் சின்னசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## நாமக்கல்லில் 37 மி.மீ., மழை

நாமக்கல்வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த : தாழ்வு நிலை காரணமாக, நாமக்கல் மாவட்டத்தில், நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்ததுதொடர்ந்து . மழை பெய்து கொண்டிருந்ததால், நிலத்தடி நீர் மட்டம், ஆறு, குளம், குட்டை, கிணறு ஆகிய பகுதிகளில் உயர்ந்துள்ளதுமாவட்டத்தில் மழையின் அளவை பதிவு . செய்யும் மழைமானிகள் மூலம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில், நாமக்கல், 48 மி.மீ., பரமத்தி, 27, ராசிபுரம், 48.2 , சேந்தமங்கலம், 50, திருச்செங்கோடு, 30, எருமப்பட்டி, 21, மங்களபுரம், 36, புதுச்சத்திரம், 32, குமாரபாளையம், 28.4, மோகனூர், 51 மி.மீ., என, சராசரியாக, 37.16 மி.மீ., மழை

பதிவானதுஇந்நிலையில்., நேற்று வானம், மேகமூட்டத்துடன் இருந்தும், மழை பெய்யவில்லை.

## வெளிநாடுகளில் தேவை உயர்வால் இஞ்சி விலை குறைய வாய்ப்பில்லை

கொச்சி: உள்நாடு மற்றும் வெளிநாடுகளில், இஞ்சிக்கான தேவை அதிகரித்து வருகிறது. அதேசமயம், நடப்பு மாதத்தின் இறுதியில் இருந்துதான், புதிய இஞ்சி சந்தைகளுக்கு வரத்துவங்கும். இதனால், இஞ்சியின் விலை ஏறுமுகமாகவே இருந்து வருகிறது.கர்நாடகாஉலகளவில், இஞ்சி உற்பத்தியில், சீனா, இந்தோனேசியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக, இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
சர்வதேச அளவில், இஞ்சி உற்பத்தியில், இந்தியா, 21-22 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது.உள்நாட்டில், கர்நாடகா மற்றும் கேரளாவில் தான், இஞ்சி அதிகஅளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்மேற்கு பருவமழையால், மேற்கண்ட மாநிலங்களில், ஒரு சில பகுதி களில், இஞ்சி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

என்றாலும், கடந்தாண்டை விட நடப்பாண்டில், ஒட்டு மொத்த அளவில் இதன் உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.90ம் ஆண்டு வரை, கேரள மாநிலம் வயநாட்டில் தான், இஞ்சி சாகுபடி அதிகரித்து காணப்பட்டது. ஆனால், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் உற்பத்தி செலவு அதிகரிப்பு போன்றவற்றால், வயநாட்டில் உள்ள பல விவசாயிகள், அண்டை மாநிலமான கர்நாடகாவில் ஒப்பந்த அடிப்படையில், இஞ்சி சாகுபடியில் களமிறங்கி உள்ளனர்.

தொழிலாளர் செலவினம்:வயநாடு சந்தையில், ஒரு கிலோ இஞ்சியின் விலை, 40-45 ரூபாய் என்ற அளவில் உள்ளது. ஒரு கிலோ உலர் இஞ்சியின் விலை, 170-180 ரூபாய் என்ற அளவில் உள்ளது.கேரளாவுடன் ஒப்பிடும் போது, கர்நாடகா மாநிலத்தில், தொழிலாளர் களுக்கான செலவினம் குறைவாக இருப்பதுடன், இஞ்சி சாகுபடிக்கு ஏற்ற இடமாக உள்ளது.குறிப்பாக, கர்நாடகாவில், ஹாசன், கூர்க், ஷிமோகா, சிக்மகளூர், பிதா, மைசூர் ஆகிய மாவட்டங்களில், நடப்பாண்டில், 29 ஆயிரம் ஹெக்டேரில், இஞ்சி, தனித்தும், ஊடுபயிராகவும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.நறுமணப் பொருட்கள் வாரியத்தின் புள்ளி விவரத்தில்,

உள்நாட்டில், கடந்த 2012-13ம் வேளாண் பருவத்தில், 1.58 லட்சம் ஹெக்டேரில், 7.45 லட்சம் டன், இஞ்சி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி:இந்திய இஞ்சிக்கு, சர்வதேச நாடுகளில் அதிக வரவேற்பு காணப்படுகிறது. தற்போது, சர்வதேச சந்தையில், ஒரு டன் இந்திய இஞ்சியின் விலை, 2,800-2,850 டாலர் என்ற அளவில் உள்ளது.கடந்த 2011-12ம் நிதியாண்டில், இந்தியாவின் இஞ்சி ஏற்றுமதி, 22 ஆயிரம் டன்னாக, மிகவும் அதிகரித்து இருந்தது. இது, கடந்த நிதியாண்டில், 19,850 டன்னாக, சற்று குறைந்திருந்தது.நடப்பு நிதியாண்டின், முதல் மூன்று மாத காலத்தில், இஞ்சி ஏற்றுமதி, கடந்த நிதியாண்டின் இதே காலத்தை விட, 53 சதவீதம் சரிவடைந்து, 3,700 டன்னாக குறைந்துள்ளது.

### இந்ரிக்கைசபியா எச்சவுதி அரே : களில் பூச்சி மருந்து அதிகம்றிகதிய காய்

இந்களில்றிகஆகும் காய்திமகுயாவில் இருந்து இறக்தி, நிர்பட்ட அளவைகப்யிக்ண விட, அதிக அளவில் பூச்சி மருந்து கலந்தாகளதுள், சவுதி அரேபிய அரசு குற்றம் நிலைஇதே.ளதுசாட்டி உள் தொடர்ந்தால், கடும் நடவபடும் கப்டிக்கை எடுக் .ளதுரித்துள்ளனவும் எச்ச

காய்கறி ஏற்றுமதிகடந்த 2012–13ம் நிதியாண்டில், இந்றிகள்கயாவின் காய்தி ஏற்-று மத ி, 1,334 கோடி ரூபாஇது .ளதுதுள்யாக உயர்ந், இதற்கு முந்தைய, 2011–12ம் நிதியாண்டில், 1,299 கோடி ரூபாஆக .ததுயாக இருந், சென்ற நிதியாண்டில், இந்-தி மதிறுகறி ஏற்யாவின் காய், 2.7 சதவீதம் அதி.ளதுரித்து உள்க

இந்கறிமொத்த காய்டுயாவின் ஒட்தி ஏற்மறுதியில், மேற்கு ஆசிய நாடு-ககளின் பங் ளிப்பு, 33 சதபாககுறிப் .ளதுமாக உள்கதிற்கும் அதிதத்வீ, ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா, கத்தார், குவைத், பஹ்ரைன், ஓமன் உள்ளிட்ட நாடுகள், அதிக அளவில், இந்இரு.றனகின்மதி செய்து கொள்குகளை இறக்றிகதிய காய்ந்த போதிலும், சென்ற, 2012–13ம் நிதியாண்டில், அதிக அளவில், இந்திய காய்-றிக மதி செய்ததில்குகளை இறக், பாகிஸ்தான் முத.ளதுடத்தில் உள்லி அவ்வாண்டில்,

284 கோடி ரூபாய் மதிப்களைறிகதிய காய்பிலான இந், பாகிஸ்தான் இறக்மதி கு .ளதுசெய்து உள்

இதற்கு அடுத்த இடத்தில், ஐக்இதில் .ளதுகிய அரபு நாடுகள் உள், இடம் பெற்-றுள்ள நாடுகள், 255 கோடி ரூபாய் மதிப்களைறிகலான காய்பி, இந்யாவில் தி மதிகுஇருந்து இறக் செய்து உள்பியாசவுதி அரே.ளன, 92 கோடி ரூபாய் மதிப்-பி களைறிகலான காய், இந் மதிகுயாவில் இருந்து இறக்திசெய்இறக்குமதி.ளதுதுள் அதிகரிப்புசவுதி அரேயாவின்பி, இந்மதிகுதிய காய்கறி இறக், ஆண்காண்டு டுக் கடந்த .றதுகிரித்து வருகஅதி2010–11ம் நிதியாண்டில், சவுதி அரேபியா, இந்-தி யாவில் இருந்து, 66 கோடி ரூபாய் மதிப்லானபி காய்களைறிக, இறக்மதி செய்குதி-இது .தருருந், சென்ற 2013–14ம் நிதியாண்டில், 85 கோடி ரூபா .ததுரித்கயாக அதி யாண்டில்சென்ற நிதி, கூடுலாகத, 7 கோடி ரூபாய்க்கு இந்களைறிகதிய காய், இந்-நாடு இறக்.ளதுமதி செய்து உள்கு

இந்லையில்நி, இத்சிக்குகைய வளர்ச்த வேட்டு வைக்கும் விதமாக, நடப்பு நிதி-யாண்டில், இந்யாவில் இருந்துதி, இரண்டு சரக்கு பெட்-களில் அனுப்பி வைக்கங்ட பட்டகப், பச்சை மிளகாயில், நிர்ணடதை விடபட்கப்யிக், அதிக அளவில் பூச்சி மருந்து உள்தாகள, சவுதி அரே.ளதுபிய அரசு குற்றம் சாட்டி உள்

இதுறித்துகு, இந்திய வேளாண் மற்றும் பதப்பட்ட உணவுப் பொருட்கள் தப்டுத்ப பாட்டுமேம் ஆணை(அபிடா) திற்கும்யத், சவுதி அரேபிய அரசு கடிதம் எழுதி உள்-தத்தில்டிகஅக்.ளது, அண்மையில், இந்திமதிகுயா வில் இருந்து இறக் செய்பட்ட யப் களில்றிககாய், அனுடதை விடபட்கப்திக்ம, கூடுலத ாக, பூச்சி மருந்து படிமம் இருந்இதே .ளதுடுள்பட்கப்டிக்பிடுதது கண் நிலை தொடர்ந்தால், வரும் காலத்தில், சவுதி அரேபிய அரசு, கடும் நடடிக்கைவ எடுக்கும் என, தெரி.ளதுடுள்பட்கப்விக் பரிசோதனைடுத்துயஇதை:, அனைத்து ஏற்ளுக்கும்கமதியாளர்று, ‘அபிடா’ அமைப்பு கடிதம் அனுப்அதில் .ளதுயுள்பி, சவுதி அரே-மதி விதிகுயாவின் இறக்பி களைமுறை பூர்த்தி செய்யும் வகையில், அனைத்து காய்களும்றிக, ஏற்மதிறு செய்-

பாகதற்கு முன்வடுபயப், பரிடுத்த வேண்டும் எனபசோதனைக்கு உட், தெரி-கப்விக்
 சவுதி.ளதுபட்டு உள்அரேபியா, பூச்சி மருந்து படிம அளவு குறித்து எதுவும் தெரி-
.வில்லைகவிக்
இருந்த போதிலும், ஐரோப்பிய கூட்டபற்றும்மைப்பு நாடுகள் பின், விதி-றைமு
களின் படி, இனி, இந்திய ஏற்ளர்கள்யாமதிறு, சவுதி அரே-றிகவிற்கு காய்யாபி
களை அனுப்ப வேண்டும்மேலும்., சவுதி அரேவிற்குயாபி, புத்தம் புதிய காய்-றிக
களை அனுப்பும் போது, ‘கோடெக்ஸ்’ மற்றும் இதர சர்வளையும்கறைமுதேச விதி,
இந்றுவர் எனபற்ளர்கள் பின்யாதிமதிய ஏற்று, எதிர்.றதுகிடுபகப்பார்க்
பாகிஸ்தான் முதசென்ற:லிடம் நிதியாண்டில், இந்யாவின் காய்திகறி ஏற்தியில்மறு,
பாகிஸ்தான் )284 கோடி ரூபாய்களில்அடுத்த இடங் .ளதுதுள்டத்தை பிடித்முதலி (,
ஐக்கிய அரபு நாடுகள் )255 கோடி ரூபாய்(, இங்) லாந்துகி151 கோடி ரூபாய்(,
நேபாளம் (143 கோடி ரூபாய்.ளனஆகியவை உள் (– பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன்
இணைந்து –

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.11.2013**

## அணைகள் நிரம்பியதால் காவிரியில் திறந்துவிட்ட உபரி நீரை கணக்கில் சேர்ப்பதா?



மன்னார்குடிகர்நாடக மாநிலத்தில் அணைகள் நிரம்பி வழிந்தபோது உபரியாக : திறந்து விடப்பட்ட தண்ணீரை நடுவர்மன்ற இறுதி தீர்ப்பின்படி வழங்கவேண்டிய தண்ணீராக கணக்கில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளதற்கு டெல்டா விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர் காவிரியிலிருந்து தமிழகத்திற்கு ஆண்டுக்கு.192 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் திறந்து விட வேண்டும் ஆனால் இதுவரை தமிழகத்துக்கு . 214 டிஎம்சி முதல் 220 டிஎம்சி வரை தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது என்று கர்நாடக நீர்பாசனத்துறைஅமைச் சர் பாட்டீல் அறிக்கை வெளியிட்டுள்ளார்கடந்த. ஜூலை இறுதி வாரத்தில் தென்மேற்கு பருவமழை பெய்து கர்நாடக அணைகள் நிரம்பி வழிந்தனஅதனால் . உபரிநீரை தமிழகத்திற்கு திறந்துவிட்டு கர்நாடக அரசு அங்குள்ளஅணைகளை பாதுகாத்துக்கொண்டதுஆனால் இந்த உபரிநீர் . தமிழகத்திற்கு தரவேண்டிய தண்ணீர் இல்லை என்பதை கடந்த வாரம் டெல்லியில் நடைபெற்ற காவிரி மேற்பார்வைக்குழு கூட்டத்தில் உறுதிசெய்து 26 டிஎம்சி தண்ணீரை தமிழகத்திற்கு தரவேண்டும் என்று அக்குழுவின் தலைவரான மத்திய நீர்வளத்துறை செயலாளர் உத்தரவிட்டார்.

அந்த உத்தரவிற்கு பதில் கூறும் வகையில்தான் கர்நாடக மாநில நீர்பாசனத்துறை அமைச்சர் பாட்டீல் உபரி நீரையும் கணக் கில் சேர்த்துக்கொண்டு தமிழகத்திற்கு தரவேண்டிய தண்ணீரைவிட கூடுதலாகவே வழங்கிட்டதாக அறிவித்துள்ளார் . கர்நாடக அமைச்சரின் இந்த அறிவிப்புக்கு விவசாய சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளனதமிழ்நாடு விவசாயிகள் சங்க தஞ்சை. மாவட்ட செயலாளர் சாமிநடராஜன் கூறியதாவதுகர்நாடக அரசு உபரிநீரை கணக்கில் : ஏற்றி நடுவர்மன்ற தீர்ப்புக்கு கூடுதலாக வே தமிழகத்திற்கு தண்ணீர் வழங்கிவிட்டதாக தெரிவிக்கிறதுஅப்படிபார்த்தால் .இதை ஏற்கமுடியாது . பற்றாக்குறை காலங்களில் நடுவர்மன்ற இறுதி தீர்ப்பில் சொல்லப்பட்ட நடைமுறைகளை பின்பற்றிவருகின்றதா என்பதை பார்க்கவேண்டும்.

எனவே கர்நாடக அரசு இதுபோல் முன்னுக்குபின் முரணான நடவடிக்கையை தொடர்ந்து தமிழகத்தை வஞ்சிக்குமானால், காவிரி டெல்டாவில் விவசாய நிலங்கள் தரிசாக மாறி விடும்எனவே மத்திய அரசு தற்காலிகமாக . அமைக்கப்பட்டுள்ள மேற்பார்வைகுழுவை கலைத்து விட்டு காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் பங்கீடு ஒழுங்காற்று குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்தமிழ்நாடு விவசாயிகள். சங்க திருவாரூர் மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி கூறியதாவதுகர்நாடகாவில் : இருந்து தமிழகத்துக்கு மாதந்தோறும் எவ்வளவு தண்ணீரை வழங்கவேண்டும் என நடுவர்மன்ற இறுதிதீர்ப்பில் தெளிவாக கூறப்பட்டுள்ளதுதற்போது கர்நாடக . அமைச்சர் சொன்னதுபோல இது அணையிலிருந்து வழங்கப்பட்ட தண்ணீரில்லைமாறாக . அதிகமழையால் நிரம்பி வழிந்து வந்த உபரிநீர்.

இதனை தமிழகத்திற்கான பங்கீடு தண்ணீராக ஏற்கமுடியாதுதமிழகத்தில் . பருவமழையும் குறைவாகத்தான் பெய்துள்ளதுமேட்டூர் அணையில் உள்ள . தண்ணீர் இன்னும் இரண்டு மாதத்திற்கு தான் வரும்அதன்பிறகு அறுவடை . தருணத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் சூழல் உள்ளதுஅடுத்து வருகின்ற . கோடை காலத்திலும் குடிநீர் தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தும்எனவே கர்நாடக .

அமைச்சர் பாட்டீலின் அறிவிப்பு அந்த மாநிலத்தின் சுயநலத்தை காட்டுகிறது. தொடர்ந்து மத்திய அரசு கர்நாடகத்தின் போக்கை வேடிக்கை பார்க்காமல் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்கர்நாடக அரசின் இத்தகைய அறிவிப்புகளை . உச்சநீதிமன்றம் தானாக முன்வந்து கண்டித்து காவிரி டெல்டாவில் விவசாயத்தை பாதுகாக்க வேண்டும் என்றார்.

**மேற்கு தொடர்ச்சி மலை பாதுகாப்பு முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்ட முடியாது**



மதுரைதென்னிந்தியாவின் மழை நீர் ஆதாரமாக அமைந்துள்ளது :, மேற்கு தொடர்ச்சி மலைகேரளா ., தமிழ்நாடு, கர்நாடகம், கோவா, மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய 6 மாநிலங்களில் ஆயிரத்து 600 கிமீ தூரம் 1 லட்சத்து 74 ஆயிரத்து 700 சதுர கிலோ மீட்டர் பரந்து விரிந்துள்ளதுஇதனை உலக பாரம்பரிய சின்னமாக . வின்.ஐநா யுனஸ்கோ கடந்த ஆண்டு அறிவித்துள்ளதுஅற்புதமான இந்த . மலையின் வளத்தை காக்கவும், அதன் பாரம்பரியம் குன்றி விடாமல் காக்கவும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நடவடிக்கை எடுத்து அமலாக்க வேண்டுமென மத்திய அரசுக்கு பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளதுஅதன்படி கஸ்தூரிரங்கன் . நிபுணர் குழு அளித்த பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது . விரைவில் அமலாக்கும் கட்டாயம் நெருங்கி உள்ளதுஇதன் படி மொத்த மலை . தொடரில்37% அதாவது 60 ஆயிரம் சதுர கிமீ சுற்றுச்சூழல் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்படுகிறது.

இங்கு பெரிய கட்டுமான பணிகள், சுரங்கம், மணல் அள்ளுவது, குவாரிகள், டவுன்ஷிப் விரிவாக்கம் போன்ற பணிகள் தடை செய்யப்படும்புதிய அனல் .

தற்போது .மின்நிலையங்களுக்கு அனுமதி கிடையாது இயங்கி வரும் சுரங்கங்களில் 5 ஆண்டுகளுக்குள் பணிகளை நிறுத்த வேண்டும்பாதுகாக்கப்பட்ட . வனப்பகுதியில் கேரளாவிலுள்ள123 கிராமங்கள் அமைந்துள்ளன அதில் .48 கிராமங்கள் இடுக்கி மாவட்டத்தில் உள்ளனஇன்னும் . பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளனஇதை ஆரம்பத்திலேயே . கேரளாவும், கர்நாடகமும் எதிர்த்தனஇந்த எதிர்ப்புகளை மத்திய அரசு . நிராகரித்து, குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டதும் தற்போது கேரளாவில் போராட்டங்கள் வெடித்துள்ளன மேற்கு தொடர்ச்சி மலை .6 மாநிலங்களில் அமைந்திருந்தும் கேரளா மட்டும் கடும் எதிர்ப்பை காட்டுவது ஏன் என்பது குறித்த விவரம் வருமாறு பசுமை சுற்றுச்சூழல் பாதுகாப்பு வளையமாகும்:60 ஆயிரம் சதுர கிமீட்டரில்., 11 ஆயிரம் சதுர கிமீக்கு மேற்பட்ட மலை தொடர். கேரளாவில் அமைந்துள்ளது.

மலை தொடரில் அமைந்துள்ள 62 அணைகளில் கேரளாவில் மட்டும் 31 அணை உள்ளது .1975ம் ஆண்டுக்கு பிறகு மலையில் கட்டிய அணை மற்றும் தடுப்பு அணைகளை தண்ணீர் செல்லும் சமவெளிக்கு இடமாற்றம் செய்யவேண்டும்புதிய . கட்டுமானங்கள் தடை விதிக்கப்படுவதால் முல்லைப் பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டும் கேரளாவின் திட்டத்திற்கு பின்னடைவு ஏற்படுகிறதுசபரிமலையில் அமைந்துள்ள புகழ் பெற்ற சுவாமி ஐயப்.பன் கோயில் 1951ல் சிறிய அளவிலான பகுதியில்தான் இருந்ததுதற்போது கோயிலை சுற்றி . சுமார் 150 ஏக்கருக்கு மேல் பரந்து கட்டுமானங்கள் நிறைந்துள்ளனஇது . அனைத்தும் வனமாக இருந்து கோயிலுக்கு அளிக்கப்பட்டதாகும்கோயிலை சுற்றி . கூடுதல் இடங்களை வளைத்து விரிவாக்கம் செய்வதற்கும் கட்டுமான பணிகளுக்கும் தடங்கல் ஏற்படும்இதுபோன்ற பல்வேறு பணிகளுக்கு . .முட்டுக்கட்டையாகிறது

தென் மண்டல மேற்கு தொடர்ச்சி மலை பாதுகாப்பு குழு தலைவர் அப்பாஸ் கூறியதாவது:1975க்கு பிறகு மலையில் கட்டிய அணைகளை சமவெளி பகுதிக்கு

மாற்றி கட்டவேண்டும் என்று குழு பரிந்துரைத்திருப்பது கேரளாவுக்கு கடும் அச்சத்தை உண்டாக்குகிறது ஏனென்றால் இடுக்கி அணை .1969 முதல் 1976க்குள் கட்டப்பட்டதாகும்சிறுதோணி ., குளமாவு, சித்ராணம் அணைகளுக்கும் சிக்கல் ஏற்படும்.1956க்கு பிறகு கேரளாவில் 1 லட்சம் ஏக்கருக்கு மேல் வனப்பகுதிகள் அழிக்கப்பட்டு கட்டிடங்களாக, குடியிருப்புகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. மரங்கள் அழிக்கப்பட்டு பணப்பயிர்கள் விளைவிக்கப்படுகின்றனஇதுபோன்று . கேரளாவின் பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசின் திட்டம் முட்டுக்கட்டையாக அமையும் இயற்கை எழிலுடன் மழை .எனவே கேரளா எதிர்க்கிறது .வளம் நிறைந்த மேற்கு தொடர்ச்சி மலையை தேசிய பொக்கிஷமாக காக்கவேண்டும்இவ்வாறு. தெரிவித்தார்.

**வரத்து குறைந்ததால் பருப்பு, மல்லி விலை உயர்வு**



விருதுநகர்விருதுநகர் மார்க்கெட்டில் வரத்து குறைவால் மல்லி மூட்டைக்கு : ரூ.250ம், பருப்பு வகைகள் மூட்டைக்கு ரூ.200ம் விலை உயர்ந்துள்ளதுவடமாநிலங்களில் பெய்த கனமழையால் பருப்பு மற்றும் மல்லி. விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதுஇதனால் பாசிப்பயறு ., துவரை, உளுந்து மற்றும் மல்லி வரத்து குறைந்து வருவதால் பரு ப்பு வகைகள் மூட்டைக்கு )100 கிலோ( ரூ.200 வரை விலை உயர்ந்துள்ளது.

லயன் உளுந்து ரூ.5,100ல் இருந்து ரூ.5,300, பர்மா உளுந்து பருவட்டு ரூ.4,800ல் இருந்து ரூ.5,000, பர்மா உளுந்து பொடி ரூ.4,400ல் இருந்து ரூ.4,600, லயன் உளுந்தம்பருப்பு ரூ.6,900ல் இருந்து ரூ.7,100, பர்மா உளுந்தம்பருப்பு பருவட்டு

ரூ.5,900ல் இருந்து ரூ.6,100, பர்மா உளுந்தம்பருப்பு பொடி ரூ.5,400ல் இருந்து ரூ.5,600, தொலி உளுந்து ரூ.5,300ல் இருந்து ரூ.5,500 என விலை உயர்ந்துள்ளது. பாசிப்பயறு ரூ.6,200ல் இருந்து ரூ.6,400, பாசிப்பருப்பு லயன் ரூ.8,300ல் இருந்து ரூ.8,500, நாடு பாசிப்பருப்பு ரூ.8,100ல் இருந்து ரூ.8,300 என விலை அதிகரித்துள்ளது.

துவரை குல்பர்க்கா ரூ.4,800ல் இருந்து ரூ.5,000, துவரை பர்மா ரூ.4,000ல் ருந்து ரூ.4,200, துவரம் பருப்பு லயன் ரூ.7,200ல் இருந்து ரூ.7,400, துவரம் பருப்பு உடைசல் ரூ.6,400ல் இருந்து ரூ.6,600, துவரம் பருப்பு பர்மா ரூ.6,200ல் இருந்து ரூ.6,400 என உயர்ந்துள்ளது)மல்லி லயன் .40 கிலோ.ரூ (2,650ல் இருந்து ரூ.2,900 என மூட்டைக்கு ரூ.250 விலை உயர்ந்துள்ளது.

**முருங்கை விளைச்சல் குறைந்ததால் ஒரு கிலோ ரூ.200க்கு விற்பனை**



புதுச்சேரி.விளைச்சல் குறைந்ததால் முருங்கைகாய் கிலோ ரூ :200க்கு விற்பனை செய்யப்படுகிறது .தமிழ்நாட்டில் முருங்கை சாகுபடி முக்கிய வேளாண் தொழிலாக இருந்து வருகிறதுடெல்லி ., மும்பை, பெங்களூர், விசாகப்பட்டினம், காக்கிநாடா, எர்ணாகுளம், கொச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு முருங்கைக்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறதுகரூர் மாவட்டத்தில் ஏராளமான பரப்பளவில் . விவசாயிகள் முருங்கை பயிரிட்டுள்ளனர்டிசம்பர் வரை சீசன் காலங்களில் இந்த . பகுதியில் இருந்து தினமும் 15 முதல் 35 லாரிகளுக்கு மேல் முருங்கை காய்கள்

அனுப்பப்படுகிறதுகடந்த சில மாதங்களாக மழை இல்லாததால் கிணறுகளில் . தண்ணீர் குறைந்து பாசன வசதி கிடைக்காமல் முருங்கை காய் விளைச்சல் பாதிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக கிலோ ரூ.100க்கு முருங்கைக்காய் விற்கப்பட்டது . சில்லறை விலையில் ஒரு காய் ரூ.5 முதல் ரூ.6 வரை விற்பனையானதுவரலாறு . காணாத அளவில் நேற்று முருங்கை காய் விலை கிடுகிடுவென உயர்ந்து ஒரு காய் ரூ.10க்கும் கிலோ ரூ.200க்கும் விற்கப்பட்டதால் மக்கள் கலக்கமடைந்தனர்கடந்த . ஆண்டுகளில் இதே மாதத்தில் .முருங்கைக்காய் கிலோ ரூ (நவம்பர்)20 முதல் ரூ.30க்கு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**18.11.2013**

## ஈரோடு மாவட்டத்தில் விடிய, விடிய மழை பெருந்துறையில் அதிகபட்சமாக 52 மில்லி மீட்டர் பதிவாகியது

ஈரோடு

ஈரோடு மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. பெருந்துறையில் அதிகபட்சமாக 52 மில்லிமீட்டர் மழை பதிவாகியது.

பலத்த மழை

வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி புயல் சின்னமாக மாறியது. இந்த புயல் நேற்று முன்தினம் நாகப்பட்டினம் அருகே கரையை கடந்தது. இதனால் தமிழ்நாடு முழுவதும் பரவலாக நேற்று முன்தினம் மழை பெய்தது. ஈரோடு மாவட்டத்திலும் நேற்று முன்தினம் காலையில் இருந்தே வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. பின்னர் தொடர்ந்து சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. மதியம் 2 மணிக்கு பிறகு பலத்த மழையாக உருவெடுத்தது. இரவு வரை கன மழை பெய்து கொண்டு இருந்தது. அதன்பின்னர் மீண்டும் சாரல் மழை விடிய, விடிய பெய்து கொண்டு இருந்தது.

நேற்று அதிகாலையில் குளிர்ந்த காற்றுடன் கூடிய சாரல் மழை பெய்தது. பகல் நேரத்தில் வழக்கம்போல் வெயில் அடிக்க தொடங்கியது. ஈரோட்டில் பெய்த மழையால் சாலை ஓரங்களில் உள்ள சாக்கடையில் கழிவுநீருடன் சேர்ந்து மழைநீர் ஆறாக ஓடியது. இதனால் பெரும்பள்ளம் ஓடையில் தண்ணீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதேபோல் சுண்ணாம்பு ஓடையிலும், பிச்சைக்காரன் ஓடையிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

அதிகபட்ச மழை

பெருந்துறையிலும், ஈரோட்டிலும் அதிகபட்சமாக மழை பெய்து உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு(மில்லிமீட்டரில்):–

பெருந்துறை – 52

ஈரோடு – 50

ஓலப்பாளையம் – 44

கோபிசெட்டிபாளையம் – 39

ஒரத்துப்பாளையம் – 39

புங்கம்பாடி – 38.06

மொடக்குறிச்சி – 36

சிவகிரி – 35

பவானி – 33

சென்னிமலை – 32

கவுந்தப்பாடி – 26.06

எலந்தகுட்டைமேடு – 27

அறச்சலூர் – 20

கொடிவேரி அணை – 13

சத்தியமங்கலம் – 12

பவானிசாகர் – 10.

**தேனி மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை சோளப்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின**

தேனி

தேனி மாவட்டத்தில் விடிய, விடிய பலத்த மழை பெய்தது. ஆண்டிப்பட்டி பகுதியில் சோளப்பயிர் கள் மழைநீரில் மூழ்கின.

விடிய,விடிய மழை

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்குதல் அதிக அளவில் இருந்தது. இதனால் மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருந்தனர். வைகை அணை, மூலவைகை ஆறு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் விவசாயிகள் மழை பெய்ய வேண்டி சிறப்பு பூஜைகள் நடத்தினர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை கூடலூர், கம்பம் பகுதிகளில் மழை பெய்தது.

தொடர்ந்து மாவட்டம் முழுவதும் இரவில் குளிர் நிலவியது. நேற்று முன்தினம் நள்ளிரவில் தேனி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி, போடி, கம்பம் என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. பலத்த மழையாகவும், இடையிடையே சரால் மழையாகவும் பெய்த இந்த மழை நேற்று காலை வரை தொடர்ந்து பெய்தது. விடிய, விடிய பலத்த மழை பெய்ததால் சாலை களிலும், தெருக்களிலும் மழைநீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது. தேனி நகர் பெரியகுளம் சாலையில் மழையின் போது சாக்கடை கால்வாயில் அடைப்பு ஏற்பட்டதால் மழை நீரும், சாக்கடை கழிவு நீரும் சாலையில் தேங்கி நின்றது. இதனால் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கடந்து செல்லும் போது பரிதவித்தனர்.

பயிர்கள் மூழ்கின

ஆண்டிப்பட்டி அருகே பிராதிகரன்பட்டி பகுதிகளில் பெய்த பலத்த மழை பெய்தது. இதனால் அப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த சோளப்ப்யிர்கள் சாய்ந்தன. சில வயல்களில், சோளப்பயிர், நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இருப்பினும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்) வருமாறு:–

ஆண்டிப்பட்டி–9, அரண் மனைப்புதூர்–5.8, கூடலூர் –7.5, உத்தமபாளையம்–8, சண்முகாநதி அணை–6, வைகை அணை–10.8, மஞ்சளாறு–8, சோத்துப் பாறை–2.

இந்த மழை விவசாயிகளை மகிழ்ச்சி அடைய வைத்து உள்ளது. இதே மழை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

**விருதுநகர் வரத்துக் குறைவால் மல்லி, துவரை உளுந்து விலை உயர்வு**



விருதுநகர்,-

விருதுநகர் மார்க்கெட்டில் வரத்துக் குறைவால் மல்லி, துவரை மற்றும் உளுந்து விலை உயர்ந்து உள்ள நிலையில் சீனி, கொண்டைக்கடலை விலை குறைந்துள்ளது.

**<u>உளுந்து</u>**

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடைக்கு ரூ.200 விலை உயர்ந்து ரூ.4,600 முதல் ரூ.5,300 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.5,600 முதல் ரூ.7,100 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.5,300 முதல் ரூ.5,500 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.200 விலை உயர்ந்து ரூ.4,200 முதல் 5,000 வரையிலும், துவரம் பருப்பு ரூ.6,400 முதல்

ரூ.7,400 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடைக்கு ரூ.200விலை உயர்ந்து ரூ.6,300 முதல் ரூ.7,500 வரையிலும், பாசிப் பருப்பு 100 கிலோ மூடை ரூ.8,300 முதல் ரூ.8,700 வரையிலும் விற்பனை செய்யப்பட் டது. மல்லிலயன் ரகம் 40 கிலோ மூடைக்கு ரூ.250 விலை உயர்ந்து ரூ.3,100 முதல் ரூ.3,250 வரையிலும், மல்லி நாடு ரகம் ரூ.4,250 முதல் ரூ.4,700 வரையிலும் விற்பனை ஆனது. வத்தல் சம்பா ரகம் குவிண்டால் ரூ.5,800 முதல் ரூ.6,700 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.7,000 முதல் ரூ.7,500வரை யிலும், முண்டு வத்தல் ரூ.4,000 முதல் ரூ.5,800 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,500 முதல் ரூ.1700 வரையிலும் விலை சொல்லப்பட்டது.

**<u>சமையல் எண்ணை</u>**

விருதுநகர் எண்ணை மார்க்கெட்டில் கடலை எண்ணை 15 கிலோ 1,400 ஆகவும், நல்லெண்ணை 15 கிலோ ரூ.3,267 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,605 ஆகவும், சூரிய காந்தி எண்ணை ரூ.1500 ஆகவும் விற்பனை ஆனது. நிலக்கடலை பருப்பு 80 கிலோ ரூ.4,200 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,800 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,415ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோ ரூ.980 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.10 விலை குறைந்து ரூ.3,115 ஆகவும், கொண்டைக்கடலை குவிண்டாலுக்கு ரூ.125 விலை குறைந்து ரூ.3,275 ஆகவும், பொரி கடலை 55 கிலோவுக்கு ரூ.50 விலை குறைந்து ரூ.2,700 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,950 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,400 வரையிலும், மசூர் பருப்பு ரூ.4,150 முதல் ரூ.4250 வரையிலும், ரவை 90 கிலோவுக்கு ரூ.35 விலை குறைந்து ரூ.3,450 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.3,110 ஆகவும் விலை சொல்லப்பட்டது.

**<u>காபி</u>**

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,250 ஆக வும், ஏ ரகம் ரூ.9,900 ஆகவும், சி ரகம் ரூ.8000 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.7,100 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.6,800 ஆகவும் விற்பனை ஆனது.

வரத்துக் குறைவால் உளுந்து, துவரை, பாசிப்பயறு ஆகியவற்றின் விலை உயர்ந்து உள்ளது.

**கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை கலெக்டர் பார்வையிட்டார்**

நீடாமங்கலம்,

நீடாமங்கலம் அருகே கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை கலெக்டர் நடராசன் பார்வையிட்டு உரிய சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்.

**<u>கோமாரி நோய் பாதிப்பு</u>**

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பகுதியில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு சுமார் 20-க்கும் மேற்பட்ட பசு மாடுகள், கன்றுகள், காளைகள் இறந்தன. மேலும் பல மாடுகளும், கன்றுகளும் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டன. இதனால் கிராமப்புறங்களில் மாடுகளையும், கன்றுகளையும் வளர்ப்போர் நோயிலிருந்து கால்நடைகளை காப்பாற்ற முயற்சிகள் எடுத்து, கால்நடை மருத்துவர்களை கொண்டு சிகிச்சை அளித்து வருகிறார்கள். திருவாரூர் மாவட்டம் முழுவதும் ஏராளமான மாடுகள் இறந்ததுடன், நூற்றுக்கணக்கான மாடுகளும், கன்றுகளும் கோமாரி நோய் தாக்குததலால் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்த கலெக்டர் சி.நடராசன் உடனடியாக மாவட்ட அளவில் கால்நடை பராமரிப்புத்துறையினரை அழைத்து ஆலோசனைக்கூட்டம் நடத்தி தக்க அறிவுரை வழங்கினார். இதைத்தொடர்ந்து கிராமப்புறங்களில் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

**<u>ஆய்வு</u>**

இந்தநிலையில் நீடாமங்கலம் ஒன்றியம் அனுமந்தபுரம், ரிஷியூர், பெரம்பூர், சோணாப்பேட்டை, எடமேலையூர் மேற்கு ஆகிய ஊராட்சிகளில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட பசு மாடுகளை திருவாரூர் மாவட்ட கலெக்டர் சி.நடராசன் பார்வையிட்டார். அப்போது கால்நடைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும், நோய் தடுப்பு முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார். உடனடியாக அனைத்து ஊராட்சி பகுதிகளிலும் நோய் தடுப்பு மருந்துகள், பிளிச்சீங் பவுடர் தெளிக்க மருத்துவ அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அறிவுரை வழங்கினார். ஆய்வின்போது கால்நடை

பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் முகமதுகனி, கால்நடை உதவி இயக்குனர் தனகோபால், டாக்டர் மகேந்திரன், தாசில்தார் காளேஸ்வரன், ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஜீவானந்தம் மற்றும் கால்நடை மருத்துவர்கள், அலுவலர்கள் இருந்தனர்.

**கரூர் அருகே நடந்த மருத்துவ முகாமில் கால்நடைகளுக்கு, கோமாரி நோய்க்கு தீவிர சிகிச்சை**

கரூர்,

கரூர் அருகே நடந்த சிறப்பு மருத்துவ முகாமில் கால் நடைகளுக்கு கோமாரி நோய் சிகிச்சை தீவிரமாக நடைபெற்றது.

சிறப்பு மருத்துவ முகாம்

ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சியில் ஆவின் நிர்வாகத்தின் மூலம் கால் நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி கலந்து கொண்டு கால்நடைகளுக்கு குடல் புண் நீக்க மருந்துகள் வழங்கி முகாமினை தொடங்கி வைத்தார்.

முகாமில் கோமாரி போன்ற கொடிய நோய்களுக்கு தடுப்பூசி மற்றும் குடல்புண் நீக்க மருந்துகள் வழங்கப் பட்டன. இந்த பகுதியில் உள்ள 200-க்கும் மேற்பட்ட மாடுகள் மற்றும் கன்றுகளுக்கு முகாமில் சிகிச்சை அளிக்கப் பட்டு உள்ளன.

இதுபோன்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொது மக்கள் முழு அளவில் கலந்து கொண்டு தங்களின் கால்நடை களை நன்றாக பாதுகாத்து கொள்ள வேண்டும் என்று கலெக்டர் தெரி வித்தார்.

ஊக்கத் தொகை

பின்னர் கறவை மாடுகளை பராமரித்து அதிகமாக பால் உற்பத்தி செய்த 34 பயனாளி களுக்கு ஊக்கத் தொகை ரூ.1 லட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலைகளையும், 20 பயனாளிகளுக்கு சிறப்பாக கறவை மாடுகளை வளர்த்ததற் காக நினைவு பரிசுகளையும் கலெக்டர் ஜெயந்தி வழங் கினார்.

நிகழ்ச்சியில் ஆவின் திருச்சி மண்டல கூட்டுறவு சங்க துணை தலைவர் பாஸ்கரன், ஆவின் திருச்சி மண்டல பொது மேலாளர் தியாக ராஜன், திருச்சி ஆவின் மேலாளர் துரையரசன், துணை பதிவாளர் (பால்வளம்) முத்துகிருஷ்ணன், கரூர் ஒன்றிய குழு தலைவர் திருவிகா, காகிதபுரம் பேரூ ராட்சி தலைவர் கமலக் கண்ணன், ஆத்தூர் பூலாம் பாளையம் ஊராட்சி தலைவர் வள்ளியம்மாள், கால்நடை மருத்துவர்கள் வேலுசாமி, பிரேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.